
# பெரியார்★★★ காந்தி

340



C.N. அண்ணாதுரை M.A.

XA: 240

# உலகப் பெரியார் காந்தி

பெரியார் பகுத்தறிவுப் பண்ணை,
73, அழகர் கோயில் சாலை,
கோரிப்பாளையம்,
மதுரை - 625 002.

C.N. அண்ணாதுரை, M.A.

திராவிடப்பண்ணை
திருச்சிராப்பள்ளி-2

34, சிந்தாமணி :: திருச்சி - 2.

ஒன்பதாம்பதிப்பு 1974 – டிசம்பர்

உரிமையுடையது

விலை ரூ. 1–50

44868

ஜெயபால் பிரிண்டிங் ஒர்க்ஸ். திருச்சி-2. போன் : 5837

# மஹாத்மா காந்தி

---

**அண்ணல் வாழ்க்கையில் முக்கிய சம்பவங்கள்**

1869, அக்டோபர் 2 காந்திஜி பிறப்பு.

1881, ராஜகோட் ஹைஸ்கூலில் சேர்ந்தார்.

1883, அன்னை கஸ்தூரிபாயை மணந்தார்.

1888, செப்டம்பர், இங்கிலாந்துக்குப் பிரயாணம்.

1891, ஜூன், இந்தியா திரும்பி வக்கீல்தொழிலில் ஈடுபட்டார்.

1893, ஏப்ரல், தென்னாப்பிரிக்கா பிரயாணம்.

1896, இந்தியா திரும்பினார்.

1896, நவம்பர், தமது குழந்தைகளுடனும் மனைவியுடனும் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பவும் சென்றார்.

1906, டிரான்ஸ்வாலிலிருந்த ஆசிய மக்களைப் பகிஷ்கரிக்கும் சட்டத் திருத்தத்தை எதிர்த்து சாத்வீகப் போராட்டம் ஆரம்பிக்கப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்.

1907, வக்கீல் தொழிலை உதறித்தள்ளிவிட்டுச் சாத்வீகப் போராட்டத்தில் இறங்கினார்.

1908, ஜன. 10. டிரான்ஸ்வாலிலிருந்து வெளியேற மறுத்ததால் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்.

1908, ஜன. 30. ஒரு சமரஸம் ஏற்பட்டதால் விடுதலைபெற்றார்.

1908, பிப். 8. ஒரு பட்டாணியன் அவரைக் கொல்ல முயற்சித்தான்.

1908, ஆக. மீண்டும் சாத்வீகப் போராட்டம்.

1908, அக். மீண்டும் சிறைவாசம்.

1909, ஜூன். பிரிட்டிஷ் சர்க்காரிடம் தூது போக இங்கிலாந்து பிரயாணம்.

1911–12, ஒரு வாரம் உண்ணாவிரதம். 4 மாதத்துக்கு தினசரி ஒருவேளை சாப்பாடு; பின்னர் 14 நாள் உண்ணாவிரதம்.

1912, ஐரோப்பிய ஆடைகளைத் துறந்தார். பழவர்க்கங்களை மட்டும் உண்ண ஆரம்பித்தார்.

1913, 3 பவுன் தலைவரி விதித்ததை எதிர்த்து சத்தியாக்கிரஹம் ஆரம்பித்தார். கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலையடைந்தார்.

1913, நவ. 9. மீண்டும் கைது செய்யப்பட்டு 9 மாத சிறை தண்டனையடைந்தார்.

1913, டிச. 18. நிபந்தனையின்றி விடுதலையடைந்தார்.

காந்திஜி — ஸ்மட்ஸ் உடன்படிக்கை

1914, ஜன. 21. காந்தி – ஸ்மட்ஸ் உடன்படிக்கை; சத்தியாக்கிரஹம் நிறுத்தப்பட்டது.

1914, ஜூலை, இங்கிலாந்து பிரயாணம்.

1914, ஆக. உலக யுத்தம் ஆரம்பம்; காந்திஜி லண்டனில் இந்தியர் ஆம்புலன்ஸ் படையைத் திரட்டினார்.

1915, ஜன. இந்தியா திரும்பினார்.

1915, மே, சபர்மதி ஆசிரமம் ஆரம்பித்தார்.

1915. 16, ரயில் வண்டியில் 3-வது வகுப்பில் இந்தியா-பர்மா சுற்றுப்பிரயாணம்.

1918, ஜன. தீர்வையை ரத்து செய்ய பம்பாயிலுள்ள கெய்ரா ஜில்லாவில் சத்தியாக்கிரஹம் ஆரம்பம்.

1919, பிப். ரௌலட் சட்டத்தை ரத்து செய்ய சத்தியாக்கிரஹப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்.

## சத்தியாக்கிரஹ இயக்கம் ஆரம்பம்

1919, 6. ஆசிய இந்தியா சத்தியாக்கிரஹ இயக்கம் ஆரம்பம்; நாடெங்கும் ஹர்த்தால்.

1919, ஏப். 8, பஞ்சாபில் நுழையக்கூடாதென்ற தடையை மீறியதால் டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1919, ஏப். 13. அமிருதசரஸில் ஜாலியன்வாலாபாக் கோர வதை.

1919, ஏப், 14. ஜனங்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டதால் மூன்று நாள் உண்ணாவிரதம்.

1919, ஏப், 18. சத்தியாக்கிரஹ நிறுத்தம்.

1919, செ. 'நவஜீவன்' ஆசிரியரானார்; அக்டோபரில் 'யங் இந்தியா' ஆசிரியரானார்.

1920, கிலாபத் விஷயமாக வைசிராயிடம் தூது.

1920, ஆ. 1. கேஸரி ஹிந்த் மெடல், ஜுலுயுத்த மெடல், போயர் யுத்த மெடல் ஆகியவைகளைத் துறந்தார்.

1920, டிச. அஹிம்சா முறையில் சுயராஜ்யம் பெறுவதென்று நாகபுரி காங்கிரஸில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

1921, ஜுலை. அந்நியத் துணி பகிஷ்காரம்.

1921, டிச. காங்கிரஸ் காந்திஜிக்கு சர்வாதிகாரம் அளித்தது.

1922, பிப். 1. பர்த்தோலியில் சத்தியாக்கிரஹம் ஆரம்பிக்போவதாக வைசிராய்க்கு நோட்டீஸ்.

1922, பிப். 6. சௌரி சௌராவில் ஜனங்கள் கொள்ளி, சூறையில் ஈடுபட்டதால் 5-நாள் உண்ணுவிரதம் ஆரம் தார். சத்தியாக்கிரஹ நோக்கத்தைக் கைவிட்டார்.

1922, மார்ச், 18. ராஜதுரோகமாகப் பேசியதாகக் கைது செய்யப்பட்டு 6-வருஷ சிறைவாச தண்டனை விதிக்கப் பட்டார்.

1924, ஜன. 21. அப்பெண்டிஸிடிஸ் ஆபரேஷன்; பிப், 5 விடுதலையானுர்.

## 21-நாள் உண்ணுவிரதம்

1924, செப். 18, ஹிந்து — முஸ்லிம் ஒற்றுமைக்கு 21-நாள் உண்ணுவிரதம் ஆரம்பித்தார்.

1924, டிச. பெல்காம் காங்கிரசுக்குத் தலைமை வகித்தார்.

1925, செப். அகில இந்திய சர்க்கார் சங்கத்தை ஆரம் பித்தார்.

1925, நவ. ஆசிரமவாசிகள் தவறுக நடந்துகொண்டதால் உண்ணுவிரதம் இருந்தார்,

1925, நவ. சத்தியசோதனை – காந்திஜி தமது சுய சரிதத்தை எழுத ஆரம்பித்தார்.

1928, டிச 1929-க்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்கப்படாவிடில் சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கப் போவதாகக் காங்கிரஸில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

1929, டிச. இந்தியாவின் பூர்ண சுதந்திரத்துக்குப் போராடுவதாக லாகூர் காங்கிரசில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

1930, பிப். சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்க முடிவு.

## உப்பு சத்தியாக்கிரஹம்

1930, மார்ச், 2. உப்பு சத்தியாக்கிரஹம்.

1930, மார்ச், 12. தண்டி யாத்திரை.

1930, மே, 5. கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறை.

1931, ஜன. 26. நிபந்தனையின்றி விடுதலை.

1931, மார்ச், காந்தி–இர்வின் உடன்படிக்கை.

1931, ஆக. 29. காங்கிரஸ் தூதராக இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள இங்கிலாந்து பிரயாணம்.

1931, டிச. 28. இந்தியா திரும்பினார்.

1932, ஜன. 4. கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறையில் தள்ளப்பட்டார்.

1932, செப். 20. ஹரிஜனங்களின் தனித்தொகுதியை ஒழிக்க சிறையில் சாகும்வரை உண்ணுவிரதம்.

1932, செப். 26. தம் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டதால் உண்ணுவிரதம் நிறுத்தம்.

1933, பிப். 11. 'ஹரிஜன்' பத்திரிகை ஆரம்பம்.

1933, மே. 8. ஆத்ம பரிசுத்தத்துக்காக 21 நாள் உண்ணு விரதம் ஆரம்பம்.

1933, மே. 9. சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது.

1933, மே. 23. உண்ணுவிரதம் முடிந்தது.

1934, ஜன. 26. சத்தியாக்கிரஹ ஆசிரமம் கலைக்கப்பட்டது.

1934, செப். 17. அக்டோபர் முதல் தேதியிலிருந்து அரசியலி லிருந்து விலகிக்கொள்ளப்போவதாக அறிவித்தார்.

1934, டிச. 14. அகில இந்தியக் கிராமக் கைத்தொழில்சங்கம் ஆரம்பம்.

1936, ஏப் 30. வார்தா அருகிலுள்ள சேவா கிராமம் தலைமைக் காரியாலயமாயிற்று.

1937, அக். 22. வார்தா கல்வித் திட்டம்.

1939, மார்ச், 3. ராஜகோட்டை சீர்திருத்தம் சம்பந்தமாக உண்ணுவிரதம் ஆரம்பம்; வைசிராய் தலையிட்டால் மார்ச் 7-ம் தேதி உண்ணுவிரதம் நின்றது.

1940, செப் யுத்த நிலைமை சம்பந்தமாக வைசிராயைச் சந்தித்தார்.

1940, அக். தனிப்பட்ட நபர் சத்தியாக்கிரஹத்துக்கு அனுமதி.

1941, டிச. 30. காங்கிரஸ் தலைமைப்பதவியிலிருந்து விலகினார்

1942, ஜன. 18, 1940 அக்டோபரில் நிறுத்தப்பட்ட 'ஹரிஜன்' பத்திரிகையை மீண்டும் தொடங்கினார்.

1942, மார்ச். 27. புது டெல்லியில் ஸ்டாபோர்டு கிரிப்ஸுடன் சந்திப்பு.

## குவிட் இந்தியா

1942, மே. இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷாரைக் கேட்டுக்கொண்டார்.

1942, ஆக. 8. குவிட் இந்தியா தீர்மானம்பற்றி பம்பாயில் நடந்த அ. இ. கா. க. கூட்டத்தில் பேசினார்.

1942, ஆக. 9. கைது செய்யப்பட்டு பூனாவிலுள்ள ஆகாகான் மாளிகையில் சிறைவைக்கப்பட்டார்.

1943, பிப். 10. 22. கஸ்தூரிபாய் காந்தி ஆகாகான் சிறையில் உயிர்நீத்தார்.

1944, மே 6. நிபந்தனையின்றி விடுதலை.

1944, செப். 9–47. பாகிஸ்தான் சம்பந்தமாக ஜின்னாவுடன் சம்பாஷணை.

## சென்னை விஜயம்

1946, ஜன. 21. சென்னைக்கு விஜயம்.

1946, பிப். சென்னையில் பார்லிமெண்டரி தூதுகோஷ்டி சந்திப்பு.

1946, ஏப். ஹொர்பார்ட்ஹூவருடன் சந்திப்பு.

1946, ஜூன் 30 பூனா அருகில் காந்திஜி சென்ற ஸ்பெஷல் ரயிலைக் கவிழ்க்க முயற்சி.

1946, அக் நவகாளி கலவரம் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம்.

1947, ஏப். 16 அமைதி ஏற்பட காந்திஜி – ஜின்னு கூட்டு அறிக்கை.

1947, ஆக. 15 இந்தியா சுதந்திரம் அடைந்தது.

1947, செ. 1. ஹிந்து — முஸ்லிம் ஒற்றுமைக்குக் கல்கத்தா வில் உபவாசம்,

1947, செ. 73 மணிநேரம் கழித்து உபவாச நிறுத்தம்,

1948, ஜன. 13. டில்லி கலவரத்தைக் கண்டித்து மீண்டும் தேதி நிர்ணயிக்காமல் உபவாச ஆரம்பம்.

1948, ஜன. 18. தலைவர்கள் வாக்குறுதியின்மீது உண்ணு விரதம் நிறுத்தம்.

1948, ஜன. 20. பிரார்த்தனையில் குண்டு வீசப்பட்டது.

1948, ஜன. 30. பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போகும் பொழுது காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் ஆத்மா சாந்தி அடைக!

## மகாத்மாவின் பொன்மொழிகள்

சமூகத்தோடு ஒட்டிவாழும் தன்மையை உடையவன் மனிதன் தனி மனிதன் சாதனைகள் பிறருக்கும் உபயோகப் படவேண்டுமாளுல் போதுமான அளவு சாமர்த்தியமுள்ள வேறு எந்த மனிதனுக்கும் சாத்தியமானவைகளாக அவை இருக்கவேண்டும்.

வாழ்க்கை லட்சியத்தை நோக்கி முன்னேருமல் கீழ் நோக்கிச் செல்வது சுலபமான காரியம்.

* * *

மோசமான நிலைமை ஏற்படப்போகிறது என்றிருந்தால், அப்போது ஒரு நல்ல காரியத்தைச் செய்வதன் மூலம் அந் நிலைமை ஏற்படாதபடி தடுக்கமுடியும். இது நாம் அனுபவ பூர்வமாகக் காணும் உண்மை.

உலக மக்களின் செய்கைகள் நாசகாரச் செய்கைகளாக இருந்திருந்தால் உலகம் முன்னமே அழிந்திருக்கும் என்பதை நாம் உணர முடியாதா? அன்பு, அல்லது வேறுவிதம்சொல்ல வேண்டுமானுல், அஹிம்சையால்தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது.

* * *

உலகுக்கு நல்லவனாக இருக்க நான் கடவுளுக்குத் துரோகம் செய்யமாட்டேன்.

* * *

நான் சாகவேண்டுமென்று நூற்றுக்கணக்கானவர்கள் விரும்பினுலும் சத்தியம் நிலைக்கட்டும்.

* * *

எனது நம்பிக்கையின் முதல்படி அஹிம்சை; கடைசிப் படியும் அஹிம்சையே.

* * –

நான் நம்பிக்கையை எப்பொழுதும் இழக்கவில்லை. மிகவும் நெருக்கடியான காலத்திலும் நம்பிக்கை எனதுள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும். என்றும் எனது நம்பிக்கையைக் கொல்லமுடியாது.

ஆத்மீக மனப்பான்மைக்குப் பீதியின்மையே முதல் தேவையாகும். கோழைகளிடம் தார்மீக மனப்பான்மையைக் காண முடியாது எங்கு பீதி நிலவுகிறதோ அங்கு மதம்இல்லை: கடவுளும் இல்லை,

உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதுபோல ஆத்மாவுக்குப் பிரார்த்தனை மிகவும் அவசியம்.

ஹிருதய பரிசுத்தத்தில்தான் அழகைக் காணமுடியும்.

வாழ்க்கையின் ஒரு மாறுதலே சாவாகும். அதைத்தவிர வேறொன்றுமில்லை. ஆதலால் சாவை நாம் எப்பொழுதும் எதிர்பார்க்கவேண்டும். சாவுக்கு அஞ்சுபவன் கோழையே.

## மாணவர்களே பின்பற்றுங்கள்!

மாணவர்கள் பின்பற்றுவதற்காக மகாத்மா காந்தி உபதேச ரூபமாகச் சில அருள்மொழிகளைக் கூறியிருக்கிறார், அவைகள் ஒவ்வொன்றும் சிறந்த மாணிக்கச் சொற்களாகும்.

மாணவர்கள் அரசியலிலும் கட்சி வாதங்களிலும் ஈடுபடக் கூடாது. அவர்கள் அரசியல் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபடக்கூடாது. அவர்கள் நூல் நூற்பதைத் தங்களுடைய முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கருதவேண்டும் அவர்கள் கதருடையையே அணியவேண்டும்.

மாணவர்கள் வகுப்பு உணர்ச்சிக்கோ அல்லது தீண்டாமை உணர்ச்சிக்கோ மனதில் இடந்தரலாகாது. தேசியக்கொடியின் தத்துவத்தை அவர்கள் உணரவேண்டும். மாணவர்கள் தோட்டி வேலை செய்யவும் தயாராக இருக்க வேண்டும்.

மாணவர்கள் தங்களுடைய உயிர் போவதாக இருந்தாலும், அஹிம்சையைக் கைவிடலாகாது. அவர்கள் ரகசியமாக எதுவும் செய்யக்கூடாது. அவர்கள் எப்பொழுதும் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

## காந்திஜி அனுஷ்டித்த உண்ணாவிரதங்கள்

மகாத்மா காந்தி பல தடவைகளில் தமது ஆத்மா பரிசுத்தத்துக்காகவும் ஹிந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் உண்ணாவிரதம் எடுத்திருக்கிறார். அந்த உண்ணாவிரதங்களில் முக்கியமானவைகள் பின்வருமாறு:

1924, செப். 18. கோஹாத்தில் ஹிந்து—முஸ்லிம் கலவரத்தை நிறுத்த டில்லியில் 21 நாள் உண்ணாவிரதம் இருந்தார்.

1932, செப். 20. மாக்டொனால்டு வகுப்புத் தீர்ப்பை எதிர்த்து எர்ரவாடா சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கினார். செப்டம்பர் 26-தேதி சர்க்கார் அனுப்பிய அறிக்கை கண்டு திருப்தியடைந்து உண்ணாவிரதத்தை நிறுத்தினார்.

1933, மே 8. தம்மை பரிசுத்தமாக்கிக்கொள்ள காந்திஜி எர்ரவாடா சிறையில் 2 நாள் உபவாசமிருந்தார். அதே தினம் சர்க்கார் அவரை விடுதலை செய்தனர். பூனாவிலுள்ள பர்ணகுடியில் உபவாசம் முடிந்தது.

1943, பிப். 10 — ஆகாகான் அரண்மனையில் 3 வார உண்ணாவிரதமிருந்தார்.

1947, செப் 1—கல்கத்தாவாசிகள் நிதானமடையும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தார். செப்டம்பர் 4-ந் தேதியன்று கல்கத்தாவில் அமைதியை நிலைநாட்ட முயற்சிப்பதாகத் தலைவர்கள் கூறியதன்மீது உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

1948, ஜன. 13 புது டில்லியில் வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்த, சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தார். 18-ம் தேதியன்று தலைவர்கள் அளித்த வாக்குறுதியின்மீது உபவாசத்தைக் கைவிட்டார்.

# வாழ்க்கை வழிகாட்டி

மோகன் தாஸ் கரம் சந்த் காந்தியார் என்ற பெயருடன், தென் ஆப்பிரிக்காவிலே, முரட்டு வெள்ளையர்களுக்கு எதிராகச் சாத்வீகப் போராட்டம் நடந்த காலத்திலும், நாட்டுத் தலைவராகி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய பல போராட்டங்களின் போதும், சிறைச்சாலையிலேயும், நாட்டு மக்களின் உள்ளத்திலே தூய்மையை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பலமுறை உண்ணாவிரதம் இருந்த காலங்களிலும், அவர் சென்ற ரயிலைக் கவிழ்க்க முயற்சித்த போதும், வெறியன் வெடிகுண்டு வீசியபோதும், ஆபத்து அவரை நோக்கி வந்தது. அவ்வளவு ஆபத்துக்களிலிருந்தும் அவர் தப்பினார். ஒவ்வோர் சமயமும் அவர் உயிருக்குப் பேராபத்து வந்துவிடுமோ என்று நாடு கலங்கிற்று.

எதிர்பாராத ஆபத்து. எவரும் கனவும் கண்டிராத விதத்தில், ஏற்பட்டு அவர் உயிர் துறக்க நேரிட்டது. கயவனின் கைத்துப்பாக்கியினால்.

இந்து மார்க்கத்தின் மாசு துடைத்து, அதற்குப் புதிய மாண்பு ஏற்படுத்துவதற்காகவும், அந்த மார்க்கத்தை சூதுக்கும் சுயநலத்துக்கும் ஆதிக்கத்துக்கும் சிலர் பயன்படுத்திக் கொள்ளும் கொடுமையை நீக்குவதற்காகவும், பாடுபட்டவர்களை, அந்த மதத்தைக் கெடுக்கிறவர்கள் என்று தவறாக எண்ணிக்கொண்டு, கேவல புத்தி படைத்தவர்கள், கருத்து

வேற்றுமையைச் சாக்காகக் கொண்டு, காட்டுமிராண்டித் தனத்தைக் கையாண்டு, படுகொலைகள் பல செய்துள்ளனர். மதச் சீர்திருத்தவாதிகளின் வரலாறுகள் இத்தகைய சோகச் சம்பவங்களையே நிரம்பக் கொண்டவையாக இருக்கக் காணலாம்.

இந்து மார்க்கத்துக்கு அவர் செய்ய எண்ணிய திருத்தங்களை, மத வெறி கொண்டோரும், ஆதிக்கக்காரர்களும் விரும்பவில்லை.

சிலகாலமாகவே, வடநாட்டிலே சில பத்திரிகைகளில் காந்தியார்மீதும், அவர் சகாக்கள்மீதும், பலாத்கார வெறிச் செயல்களைத் தூண்டும் முறையிலேயேகூட எழுதப்பட்டு வந்தன.

அவருடைய மாலைநேரப் பிரார்த்தனைக் கூட்டங்களிலே சென்று கலகம் விளைவிக்கவும், அவர் இந்து மார்க்கத்தைக் கெடுக்கிருர் என்று கூச்சலிடவும் செய்தனர்.

இரண்டோர் நாள், இந்தச் செயல்களின் காரணமாக அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்கள், நடைபெருமலேகூடப் போயின.

ஒவ்வொரு பிரார்த்தனைக் கூட்டத்திலும், அவர் இந்தத் தவருன போக்கை விளக்கி, அன்பும் விவேகமும் மலர வேண்டும் என்று அறிவுரை கூறியபடியே இருந்தார்.

அதே முறையிலே தமது அரிஜன் பத்திரிகையிலும் எழுதிக்கொண்டிருந்தார். தமது நோக்கத்தின் தூய்மையை விளக்கிவந்தார்.

வெறியர்கள் திருப்தி கொள்ளவில்லை. வெளிப்படையாகவே இது தெரியலாயிற்று.

சின்னாட்களுக்கு முன்பு. அவர், நாட்டு மக்களின் அகத் தூய்மையைக் கோரி, உண்ணாவிரமிருந்தார். ஆபத்தான நிலை; அந்தச் சமயத்திலே, அவர் தங்கியிருந்த பிர்லா மாளிகை முன் ஒரு சிறு வெறிக் கும்பல்கூடி 'அவர் சாகட்டும் என்று கூவிற்று. அதுசமயம் அங்கு வந்திருந்த பண்டித நேரு பதறிப்போனார்; அந்தக் கும்பலைக் கண்டித்துத் துரத்தினார்.

பிறகோர் நாள், பிரார்த்தனைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் வேறோர் பித்தன், வெடிகுண்டு வீசினான்.

அதற்குப் பிறகோர் நாள், பண்டிதநேருவின் கூட்டத்தில், வெடிகுண்டும் கையுமாக மற்றொருவன் பிடிபட்டான். அவன் ஒரு சீக்கியன் என்று செய்தி கிடைத்தது.

இவைகளுக்கெல்லாம் முன்னே, அன்பர் ராஜகோபாலாச்சாரியாரின் மோட்டார்மீது எவனோ ஒருவன் சுட்டிருக்கிறான்.

இந்தக் கோரக் கொலை நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு, பிர்லா மாளிகையிலே அவர் தங்கியிருந்த அறையின் பக்கம், எவனோ ஒருவன் நுழைந்து, யார், என்ன என்று கேட்டபோது, பேந்தப்பேந்த விழித்தான் என்று சேதி வந்தது

இப்படிப் பலவிதமான முயற்சிகளைச் செய்து வந்தனர் பாதகர்கள்.

## கண்ணீரைத் துடைத்துக் கடமையைச் செய்வோம்

கடைசியில், பிரார்த்தனைக் கூட்டத்தில், அவருக்கு எதிரே நின்று, திரளான மக்கள் கூடியிருந்த மன்றத்தில், கைத்துப்பாக்கியால் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான் காதகன்.

இத்தகைய படுகொலைகள் மூலம், ஆதிக்கத்தைப் புகுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்துடன் வேலைசெய்யும் ஒரு

சதிகாரக் கும்பல் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. சர்க்கார் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதுடன், நாடெங்கும், எவ்விதமான நிலைமையையும் சமாளிக்கத்தக்க முன்னேற்பாடுகளையும் செய்துள்ளனர்.

இந்தத் துக்ககரமான சம்பவத்தால், நாடு, தன் நிதானத்தை இழந்துவிடக்கூடாது என்பதுதான், நானிலமெங்குமுள்ள நல்லறிவாளர்களின் வேண்டுகோள்; அறவுரை.

சதிச்செயலைக் கண்டுபிடித்து, அவர்களைச் சட்டம் தண்டிக்கும். சர்க்காருக்கு அதற்கான சக்தியும் திறமையும் இருக்கிறது. நமது ஒற்றுமையுடன் கூடிய நிலை, அதற்குப் பக்கபலமாக நிற்கவேண்டும். ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலையைப் பெற்று, அந்த சாசனத்தைத் தயாரிக்கும் அரும் பணியிலே ஈடுபட்டு, அமைச்சர்கள் தமது அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில், சுழல் துப்பாக்கிக் கொண்டு, அவ்வளவு பேரையும், ஏழு அமைச்சர்களையும் சுட்டுக் கொன்றான், பர்மாவில் சில காலத்துக்கு முன்பு. இன்றும், குண்டு பாய்ந்த அந்த சடலங்களை வைத்துக்கொண்டுள்ளனர். அமைச்சர்களை, அவர்களின் தலைவர் அவுங்சானைச் சுட்டு வீழ்த்திஞல், அரசு கவிழ்ந்துவிடும் என்று அறிவிலிகள் எண்ணினர். ஆனால், பர்மா நிதானம் தவறாமல், துக்கத்திலே தன் மனதைப் பறிகொடுத்துவிடாமல், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, கடமையைச் செய்து வருகிறது. அது நம் அண்டை நாடு – சிறிய நாடுதான். அந்தச் சிறிய நாடு காட்டிய பெரிய உறுதி, நமக்கும் வேண்டும். மனக்குழப்பம் மனமாச்சரியம் எழக்கூடாது. உலகின் கண்கள் நம்மீது பாய்ந்துள்ள நேரம் – உரிமை கிடைத்துள்ள வேளை - உலுத்தர் சிலரின் செயலால் உள்ளம் கெட்டுவிட இடந்தராமல் உறுதியுடன் நின்று, நாட்டு நிலையைக் காப்பாற்றுவோமாக !

# உத்தமரை இழந்தோம்.

யமுனை நதி — இந்திய துணைக்கண்டத்து மக்கள் மட்டு மல்ல, உலகிலேயே பல இடங்களிலும் உள்ள மனிதாபி மானமும் நல்லறிவும் விடுதலை வேட்கையும் கொண்ட மக்கள் அனைவருமே, சிந்திய கண்ணீரையே, கொண்டு செல்கிறது. அவ்வளவு கண்ணீரும் சேர்ந்து கடல் நீரில் கலக்கிறது. உலகைத் திருத்தவேண்டுமென்று உழைத்த உத்தமர்கள் எத்தகைய தியாகக் கடலிலே வீழ்த்தப்பட்டனரோ, அதே நிலைக்கு, மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியாரின் வாழ்க்கையும், உத்தமர் அனைவரும் சென்ற வழியே சென்று தீர வேண்டி நேரிட்டுவிட்டது.

யமுனை நதிக்கரையிலே, 31—1—48 மாலை 5-மணிக்கு மூட்டப்பட்ட தீ, அங்கு காந்தியாரின் சடலத்திற்கு மட்டு மல்ல, உலகிலே இலட்சக்கணக்கான மக்களின் அடி வயிற்றிலே கூட அல்ல, இருதயத்தையே தீண்டிய தீ ஆகும். உலக வரலாற்றிலே, இதுபோன்ற துக்ககரமான, துடிதுடிக்கச் செய்யும், திடுக்கிட்டுத் திகைக்கச் செய்யும் நிகழ்ச்சி, வேறு இல்லை. இந்திய பூமி மட்டுமல்ல, இருதயம் படைத்த நல்லறி வாளர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ, அங்கெல்லாம், இந்தத்துக்கம் மக்களை, இதுவரை அவர்கள் அனுபவித் தறியாத விதமாக ஆக்கிவிட்டிருக்கும்.

எங்கு நோக்கினாலும் ஒரே திகைப்பு! கலங்கிய கண்கள்! ஏக்கம்!

ஒவ்வோருவருக்கும் அவரவர் குடும்பத்திலே, அவர்களின் இருதயத்தில் முதலிடம்—முக்கிய இடம் பெற்ற எவரேனும் இறந்துபோய், அந்தத் துக்கத்தின் தாக்குதலால் அவதிப்பட்ட அனுபவம் இருக்கத்தான் செய்யும் என்ற போதிலும் எதுவும், இந்தச் சமயத்திலே ஆறுதல் அளிக்கும் ஆற்றலைப் பெற்றதாகக் காணோம்.

இந்தத் துக்கம், ஏதோ ஓர் புதுவிதமானதாக இதுவரை அனுபவவித்த எந்தத் துக்கத்தையும்விட, அதிகமானதாக இருக்கிறது. மரணம் எவ்வளவு தொண்டு கிழவருக்கு ஏற்படினுங்கூட, துக்கம் தரத்தான் செய்யும். ஆனுல் இது மரணமா! அல்லவே! அவர் சாகவில்லை. மாபாவியினுலே கொல்லப்பட்டார்.

மாலை நேரத்தில், ஒரு நாட்டு மக்களையே உலகறிய வைத்த உத்தமர் தம் பேத்திமார் இருபக்கமும் வர, தம் சொல்லை எதிர்நோக்கிக் கூடியிருக்கும், ஆர்வமிக்க மக்கள் முன்வந்து கொண்டிருக்கிருர் — இதோ இன்னோர் நிமிஷம்— அவர் மேடைமீது அமர்ந்து, ஒற்றுமையைப்பற்றி ஒருவருக்கொருவர் குரோதம், துவேஷம் நீங்கி, நாட்டு நன்மதிப்பை நாசமாக்காத வகையில் நடந்து கொள்ளவேண்டுமென்று அன்புரை அளிக்கப் போகிருர். எத்தனையோ நாட்களாக அளித்தது போலவே—அந்த ஒரு நிமிஷம் எவ்வளவு பெரிய மாறுதலை உண்டாக்கிவிட்டது — நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும் நிலைமையை ஏற்படுத்திவிட்டது. அந்த நிமிஷத்தில், அவர் மேடைமீதேறப் படிக்கட்டுகளில் கால் வைக்கும் நேரத்தில் எவனே ஒரு கயவன், மனித உருவில் உலவிய மிருகம், மாநிலத்தோர் எவரும் காரி உமிழத்தக்க மாபெருந் துரோகம் புரிய மனதைத் துவேஷக் கூடாக்கிக் கொண்ட மாபாவி, ஒன்று, இரண்டு, மூன்று என்று துப்பாக்கியால் சுட்டான் மார்பிலே, அடி வயிற்றிலே — கண்கள் மூடிக் கொண்டன — அவர் சாய்ந்தார் நாடு முழுவதும் சோகக் கடலிலே வீழ்ந்து விட்டது — உள்ளே கொண்டு சென்றனர் — உடனிருந்தோர் கதறினர் — உயிர் அவருக்குப் பிரிந்தது —

அந்த நிமிஷமே கௌரவமே நாட்டைவிட்டுப் பிரிந்து விட்டது.

எவ்வளவு பெரிய கேடு செய்கிறோம், எத்துணைப் பெரிய துரோகம் என்பதை எண்ணிப்பார்க்காமலே அந்த வெறியன் செய்த காரியம், ஏசுவைச் சிறுவையில் அறைந்த ரோம் வெறியர்களும் வெட்கித் தலை குனியும்படியானதாகும். ரோம் ஆதிக்க வெறியர்களாவது, ஏசுவின் செல்வாக்கு பரவுவதால் தங்கள் ஆதிக்கம் கெடுகிறது என்று பொருமையும் துவேஷமும் கொண்டதால், அக்கொடுஞ் செயல் புரிந்தனர். இந்த வெறியனோ, எந்த மாபெரும் தலைவரால் இவன் மதிப்புப் பெற்றானோ, இவனுடைய வாழ்வுக்கு ஓர் புது அந்தஸ்து கிடைத்ததோ, நாட்டுக்கு ஓர் புது நிலை ஏற்பட்டதோ, அந்த மாபெருந் தலைவரையல்லவா, மார்பிலே சுட்டுக் கொன்றான்! பெற்ற தாயைக் கொல்லும் பேயன், அந்த மாலை நேரத்திலே, மக்களுக்கு மதிமொழி கூற வந்தபோது, மஞ்சள்நிற வெயிலில் அவருடைய முதுமை தெரிந்தபோது, ஒரு பெரிய துணைக் கண்டத்தில் சர்க்காரே அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக் காத்திருந்தும், ஒரு பாதுகாப்பையும் விரும்பாமல், தனியாக வந்த தூய்மையைக் கண்டபோது சில நாட்களுக்கு முன்பு வெடிதண்டு வீசினான் வேறோர் வெறியன் என்பதறிந்தும், மீண்டும் எவனாவது இதுபோல் செய்தால் என்ன செய்வது என்பது பற்றிய எண்ணமே கொள்ளாமல் வந்த போக்கைக் கண்டபோது, மரணத்தின் பிடியிலே தன்னைந்தானே சிக்க வைத்துக்கொள்ளும் விதமாகப் பட்டினியிருந்து, அதன் மூலம் நாட்டு மக்களிலே சில பலருக்கு ஏறியுள்ள வெறி விஷயத்தைப் போக்க முயற்சித்தாரே சில நாட்களுக்கு முன்பு என்ற சம்பவத்தையும் எண்ணிப் பாராமல், கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தம் சொந்த வாழ்க்கை என்பதையே மறந்து, நாட்டுக்குப் புது வாழ்வு பெற்றுத் தரவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பணியாற்றி வந்தவராயிற்றே என்பதையும் எண்ணிப்பாராமல், சுட்டான்—மும்முறை—அவர் கீழே சாயும்வரை.

முப்பதாண்டுகளாக எந்த ஏகாதிபத்தியத்தின்மீது அவர் தாக்குதலை நடத்தினரோ, அந்த ஏகாதிபத்தியம் செய்யத் துணியாத காரியத்தை, எவனை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவித்தாரோ அவன் செய்திருக்கிறன் தீயிலே வீழ்ந்த நாகத்தை வெளியே எடுத்துப்போட்டால், பாம்பு, அவனையே தீண்டும் என்பார்கள். இந்தப் பாவியின் செயல் அதைவிடக் கொடுமை நிரம்பியது. ஆண்டு ஒன்றும் பூர்த்தியாகவில்லை. நாட்டுக்கு உலகிலே புது நிலை ஏற்பட்டு — இதற்குள், அவர் இயற்கையாக மரணமடைந்திருந்தால்கூட, துக்கம் ஏற்படத் தான் செய்யும். ஆனால் இப்போதோ, அவர் சாகவில்லையே! கொல்லப்பட்டார் ஒரு கொடியவனல்! அவன் வாலிபனும் — இந்துவாம்!

''இந்தியா என்ரோர் நாடுண்டு, அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு. பொன்னும் பொருளும் மிக உண்டு, போக் கறியாதார் நிரம்ப உண்டு'' என்ற அளவில் பதினரும் நூற்ருண்டிலேயே உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது 'இந்தியா என்ரோர் நாடுண்டு, அது ஆங்கிலேயருக்கு நல்ல வேட்டைக்காடு' என்று உலகம், இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டது. திலகர் காலத்திலே விடிவெள்ளி தோன்றியது போல, விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்றபோதிலும், காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, ''இந்தியா என்ரோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் உண்டு'' என்று உலகம் அறிந்துகொள்ள முடிந்தது, காந்தியாரின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக்கண்டு வந்தது. தன்னலமற்ற விளைவுபற்றிய கவலையற்ற, போராட்ட மனோ பாவத்தை நாட்டிலே காந்தியாரால்தான் உண்டாக்க முடிந்தது, அதற்கு முன்புவரையில், விடுதலை கோரி மனுச் செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ, ராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடியவிதமாக இல்லை —ஆனல் அவரால், ராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களுக்கு உண்டாக்க

முடிந்தது. எத்தனை எத்தனைப் போராட்டங்கள்! அவைகளிலே கலந்துகொண்ட வாலிபர்கள் எத்தனை எத்தனை இலட்சம்! எத்தகைய வீரச்செயல்கள், தியாகச்செயல்கள் அவர் காலத்திலே நேரிட்டன. இவ்வளவையும் தந்த தலைவருக்கு, அந்தத் துரோகி தந்தது, மூன்று குண்டுகள். காக்கை கழுகு, நாய், நரியும் அந்த மாபாவியின் உடலைத் தின்னக் கூசும். அவ்வளவு பெரிய துரோகச் செயலை அந்த வாலிபன் செய்துவிட்டான். அந்த வெறியனின் செயலால் இருள் சூழ்ந்து கிடக்கும் நேரம் இது எவரும் எதிர்பாராதது நடந்துவிட்டால், எவ்வளவு பேசிப் பேசிப் பார்த்தாலும், ஆற்றிக்கொள்ள முடியாதவிதமான நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தத் துக்கத்தை எளிதில் துடைத்திட முடியாது. ஒரு நாட்டுக்கே பெரியதோர் நெருக்கடி ஏற்பட்டுள்ள நேரம்.

இருள் கவிந்து கொண்டு இருதயம் பிடித்துக்கொண்டு, கண்களிலே நீர் கொப்பளித்துக் கொண்டுள்ள இந்த நேரத்தில், நாம் ஆறுதல் பெறுவது மிக மிகச் சிரமான காரியம். ஆனால் என்ன செய்வது? ஒரு வெறியன் செய்துவிட்ட துரோகம், நாட்டையே நிலைகுலையச் செய்துவிட்டது; மனம் பதறுகிறது. மக்கள் மனம் பதறியுள்ள நிலையிலே, நாட்டுத் தலைவர்கள் தான், ஆறுதலைத் தரவேண்டும் — துக்கத்தை ஆளுக்கோர் அளவு பங்கிட்டுக் கொள்வதன் மூலமும், இந்தக் காட்டு முறையை நாட்டிலே கண்டோமே என்பதுபற்றி எண்ணித் தலை இறங்குவதன் மூலமும் அவர் கீழே சாயும் வரையிலே அஞ்சாமல் பணிபுரிந்ததுபோல, 'வெறியர்கள் டில்லியில் உலவுகிறார்கள்; வெடிகுண்டும் வீசினார்கள்' என்பறிந்திருந்தும் மாபெருங் கூட்டத்திற்குப் பாதுகாப்புத் தேடாமல் வந்த மாண்புபோல, நாமும் இந்தத் தாங்கமுடியாத துக்கத்தையும் தாங்கிக்கொள்ளும் சக்தியைப் பெறவேண்டும். காந்தீயாரின் புகழொளியை அல்ல. அவருடைய உழைத்து அலுத்த உடலைத்தான், வெறியன் சுட்டு வீழ்த்தினான். எனவே, கண்ணீரைத் துடைத்துக்கொள்வோம்; மன வேதனையைக் கட்டுக்குக் கொண்டுவருவோம்; அவரவரும் தத்தம் வாழ்நாளில், மக்கள் பணிசெய்வதே, மறைந்த

மாபெருந் தலைவருக்குக் காட்டும் மரியாதை, செலுத்தும் காணிக்கையாகும் என்பதை அறிந்து யமுனைக்கரையிலே மூண்ட தீயை, தியாக தீயாக்கி, அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம். அவர் விரும்பியது அதுதான்—அவர் பணி புரிந்ததும் அதற்கே, குரோதம் நீங்கித் துவேஷத்தை விரட்டி, அனைவரும் ஒன்றுபட்டு நின்று. நாட்டுப் பணிபுரியுங்கள் — என்றே அவர் கூறிவந்தார் — அந்தப் பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்திலேயே, மாபாவியால் கொல்லப்பட்டார். அவருடைய மறைவு, மனவேதனை தருவதோடு நில்லாமல், நமது மனதுக்குப் புதிய உறுதியைக் கொடுத்துப் புதிய உண்மையைக் காட்டுமாக.

மகாத்மாவின் ஆவியைக் குடித்தான் பேயன்:
அவரை இழந்தோம் அவனி அவரை மறவாது!

"உலகிலேயே படைபலமும் ராஜ தந்திர பலமும் மிகுந்தோர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காண முடியும், ஆயித பலமுமின்றி," என்ற திடமனதை எந்த உத்தமர் உண்டாக்கினாரோ, அவரை ஏகாதிபத்தியமே பணிந்துவிட்ட நேரத்தில், எவனோ வெறியன், சுட்டுவிட்டான். இந்த நாடும் உலகமும் இதனை மறப்பதற்கில்லை. நமது வாழ்நாளிலே, நாடு விடுதலை பெறக்கண்டோம்; நாம் சாகுமுன் ஆங்கில நாட்டுக்கு நாமோர் அடிமை என்று இருந்த இழிவு நீக்கப்பட்டு, அதனால் நமது மக்களெல்லாம தலை நிமிர்ந்து நின்று, பூரித்து நமது தலைமுறை மகத்தானது என்று மார்தட்டிக் கூறினோம். இன்னோ, மாபாவியினால் மகாத்மா கொல்லப்பட்ட காலத்திலே வாழ்ந்தவர்கள் நாம் என்ற துக்கம், மனதைப் பிய்த்துத் தின்னுகிறது.

அவருடைய முப்பதாண்டுப் பணியிலே, ஒரு கடுமையான சொல், ஒரு நேர்மையற்ற செயல், ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை. அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும் ஆசியாவின் புகழையும், நிறத்திமிர்கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசு

களுக்கும் கிலி உண்டாகக் கூடிய அளக்குப் பரப்பிற்று. அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர். அவர் மண் குடிசையிலே தங்கினால், அங்கு செல்வதை மதிப்பளிக்கக் கூடியதென்று மன்னர் மன்னர்கள் எண்ணினர். அவருடைய மறைவு கேட்டு மாநிலமே துடிதுடித்தது போல, வேறு எங்கும் எந்தத் தலைவருக்கும் ஏற்பட்டதில்லை. புதிய மார்க்கம் துவக்கிய புத்தர், வீரத்தாலும் பிறகு விவேகத்தாலும் இந்தியாவின் புகழை வளரச்செய்ய அசோகன் பெரிய வல்லரசுகளைக் கட்டி ஆண்ட மன்னர்கள் ஆகியோர் படித்தவர்களுக்கு மட்டுமே தெரியக்கூடிய நிலை பெற்றனர். மகாத்மாவையோ, மாநிலம் முழுவதும், படித்தவர், பாமரர், பாராளும் மன்றத்தினர் அனை வரும் அறிந்து கொண்டதுடன், அவர்களின் மனதிலே, அவர் இடம் பெற்றார். சத்தியம், அஹிம்சை எனும் இரு தத்து வங்களை நாடுகொள்ள வேண்டுமென்பதை, அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார். அரசியலிலே மோசடிகளும், படு கொலைகளும் நிகழ்ந்தபோதும், அவர் மனம் வேதனைப்பட்டதே யன்றி, அவர் அந்த இரு தத்துவங்களை வலியுறுத்தத் தவறவில்லை. கடைசிவரையில் அந்தக் கொள்கையை அவர் கொண்டிருந்தார். நாடு, அந்தக் கொள்கை வழி நிற்க வில்லையே என்ற எண்ணம் அவர் மனதிலே கிளப்பிய வேதனைப்புயல் கொஞ்சமல்ல. கடந்த சில மாதங்களாகவே, இந்த மனவேதனையை அவர் எடுத்துக் கூறிவந்தார். எவரும் இயலாதது என்று எண்ணி, போகத் துணிவு பெறாமல் இருக்கும் இடத்துக்குச் சென்று காரியம் செய்ய அவர் முன் வந்தார். படுகொலைகள் நடைபெற்ற நவகாளி, கல்கத்தாப் பகுதிகளிலே, அவர் கிராமம் கிராமமாக, ஒற்றையடிப் பாதை களிலே, வயல் வரப்புகளின் மீது குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று நொந்த உள்ளங்களுக்கெல்லாம் ஆறுதல் அளித்தார். மிருகத்தன்மையை மாற்றினார். மக்களிடம் புதியதோர் மனமாறுதலை ஏற்படுத்தினார். ஆபத்து நிரம்பிய இடம், அறி வற்ற மூர்க்கர்கள் உலவிய இடம் என்று பயந்தனர் பலரும்— அவருடைய புன்சிரிப்பு அவ்வளவுக்கும் பதிலளித்தது என

உயிரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் — என்று கூறினார். எரிமலைமீது நடந்தார்; தீ அண்டவில்லை. ஆனால் சர்க்காரின் தலைமைப் பீடத்தைத் தன்னிடம் கொண்ட டில்லியில். அக்கிரமம் நடந்துவிட்டது.

''சாம்ராஜ்யங்களின் சவக்காடு, இந்த பாழாய்ப்போன டில்லி. இது நமக்குத் தலைநகராக இருக்கவேண்டாம்'' என்று கிருபாளனி போன்ற தலைவர்கள் சொன்னார்கள். உண்மையி லேயே டில்லியிலே முன்னம் அமைக்கப்பட்ட பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் அவ்வளவும், சதிச்செயலால், படுகொலையால், பாவிகளின் துரோகத்தால், சரிந்து போயின. சவக்காடு— சாம்ராஜ்யங்களின் சவக்காடு ஆம் — அதுமட்டுமல்ல — இப் போது, உலகைத் திருத்த உத்தமரையே சாகவைத்த துரோக புரியாகிவிட்டது. டில்லியிலே என்ன இருக்கிறது என்று உலகிலே. எதிர்காலத்திலே, கேள்வி கேட்கப்படும்போது, நாமும் பின் சந்ததியும், எப்படிப் பதில் கூறமுடியும் தலை கவிழ்ந்து, தழதழத்த குரலிலே, ''மகாத்மாவை மாபாவி கொன்ற இடம் அந்த இடம் அந்த டில்லி'' — என்று கூறிக் கதறவேண்டும்.

மகாத்மா கொலை செய்யப்படுவதற்கு ஒரு மணி நேரத் திற்கு முன்பு, அவருடன் சர்தார் பட்டேல் பேசிக்கொண்டி ருந்தார். அந்தப் பேச்சில், காலம் போய்விடுவதை அறிந்து, தன் அன்புரை கேட்க மக்கள் கூடி இருப்பரே என்ற எண் ணம்கொண்டு, சர்தாரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார் —மீண்டும் சந்திக்கும்போது படேல் கண்டது குண்டு பாய்ந்த மார்பும், அப்போதும் மலர்ச்சி குன்றாத முகமும் கொண்ட மகாத்மாவின் ஆவி பிரியும் கோலத்தை, துக்கந் துளைக்கும் நிலையிலே உள்ள நாம், அவர்களைச் சற்று நம் அகக்கண்முன் கொண்டுவந்து பார்க்கவேண்டும். சர்தார், நேரு, ராஜேந்திர பிரசாத், ராஜகோபாலாச்சாரியார், சரோஜினி அம்மையார், தேவதாஸ் இவர்களின் உள்ளம் இந்தச் செய்தியைத் தாங்க முடியுமா? எவ்வளவு தொடர்பு, எத்தகையத் தொடர்பு, எத்தனை ஆண்டுகளாகத் தொடர்பு, கஷ்டத்திலும் சுகத்திலும்

கலந்திருந்த அவர்களின் உள்ளம். எப்படி இருந்திருக்கும். பிர்லா மாளிகையிலே, அவருடைய உடலம் இருந்த நிலையைக் கண்டபோது? அவர்கள், அந்தத் துக்கத்தைத் தாங்கிக் கொண்டுள்ளனர். நாட்டு மக்களின் துக்கத்தைத் துடைக்கும் கடமை உணர்ச்சியுடன், அவர்களின் பக்கம் நின்று, நாமும், இந்தச் சகிக்க முடியாத துக்கத்தைத் தாங்கிக்கொள்வோம்.

உலகிலே உள்ள எல்லா நகர்களிலும். மக்களின் மனம் துடிதுடித்துப் போயிற்று. தூர தேசமான அமெரிக்காவிலே அழுகுரல், பற்பல நாடுகளிலேயும் பிரலாபம். எவரும், ஆ—என்று அலறிய நிலை, எங்கும் ஏற்பட்டதில்லை இத்தகைய கோரச் சம்பவம்.

கட்சிகளைக் கடந்த கர்மயோகி

துக்கம் நம்மை பிணைக்குமாக.

காலை 11 மணிக்குப் புறப்பட்ட பிரேத ஊர்வலம், யமுனைக் கரைப் போய்ச்சேர, மாலை ஐந்தாயிற்று. ஜனசமுத்திரத்தைக் கடந்து சென்றது கதறும் மக்களைக் கடந்து சென்றது ஐந்து மைல் இருக்குமாம், அந்தப் பாதை. அவ்வளவு இடமும் மக்கள் கூட்டம் ஆனல் அந்த ஐந்து மைல்களில் மட்டுமல்ல. இந்தியாவின் 2000 × 1000 மைல்கள் என்றுள்ள அளவு பூராவிலும் உள்ள நகரம், கிராமம் அவ்வளவு இடமும். மக்களின் சோகப் பயணமே நடந்தது யமுனையை நாமெல்லாம் காணவில்லை ஆனல் பல கண்ணீராறுகளைக் கண்ணீர் ததும்பும் கண்களால் கண்டோம். அங்கே மாலை 6 மணிக்குத் தீயிட்டனர். இங்கோ. பாதகன் அவரைக் கொன்ருன் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும், நமது இருதயத்திலே தீயிடப்பட்டது; ஆருத அணையாத தீ; ஆத்திரக்காரன் நமது நாட்டின் உயிருக்கு வைத்த தீ; நானிலமெங்கும் நம்மை அறியச் செய்த உத்தமரின் உடலிலே தீ வைத்த அந்த உலுத்தன், எவ்வளவு கொடிய துரோகம் செய்துவிட்டான் என்பதை எண்ணும்போதே. நமது இருதயத்தில் பட்ட தீ, மேலும் மூண்டுவிடுகிறது.. நாம், மிக மிக, மகத்தான நஷ்டத்

துக்கு ஆளாக்கப்பட்டுவிட்டோம். கட்சிகளை, கட்டுகளை, ஆசாபாசங்களை, கோபத் துவேஷங்களைக் கடந்து நின்ற ஒரு உத்தமரை இழந்துவிட்டோம்


இந்தத் துக்கம், கட்சிக் குரோதச் சுவர்களை இடித்தெறிந்து, நாட்டு மக்கள் அனைவரையும் குன்றாகப் பிணைக்கிறது. பல தலைவர்களின், ஆறுதலுரைகளிலும் இந்த எண்ணம் திண்ணமாகத் தெரிகிறது, மனதைக் கட்டுக்குக் கொண்டுவரவேண்டிய நேரம் தவறினால், துக்கம், மக்களைக் கல்லாக்கிவிடும்—அவ்வளவு ஆழப் பாய்ந்துவிட்டது துக்கம்.

கடைசி முறையாக, அவரைக் காண, இந்தியாவிலே உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களெல்லாம் ஓடோடி வந்து, அவர் பக்கம் நின்று புலம்பினர். சின்னாட்களுக்கு முன்பு, தங்கள் ஒப்பற்ற தலைவர் அவுங்சானை, கொலைபாதகனால் இழந்து தவிக்கும் பர்மியப் பிரதிகளும் வந்திருந்தனர். கவர்னர்கள் அவர் காலடி நின்றனர்—வைசிராய் அவர் நிலை கண்டு வாய்விட்டு அழுதார் — வல்லரசுகளிலே எல்லாம், வருத்தம் தெரிவித்து அறிக்கைகள் வெளிவந்தன. ஆனால், இவை அவ்வளவும், உள்ள துக்கத்தை அதிகப்படுத்துவதாக அமைகின்றனவேயொழிய, குறைக்கும் வழிகளாகத் தோன்றவில்லை. எந்தவிதமான ஆறுதலை நாடினாலும், அதனைத் தாண்டி அப்பால் நம்மை இழுத்துச் சென்று, இந்தத் துக்கம் தாக்குகிறது. இந்தப் பயங்கர நிலையிலிருந்து விடுபடும் ஒரே வழி. இந்த துக்கத்தை, நம்மை ஒரு சேரப் பிணைக்கும் சக்தியாக மாற்றுவதுதான். இந்த மகத்தான வேலையை முன்னிருத்தி, அழுத கண்களுடன் நின்றபோதிலும், அறநெறியைக் கைப்பிடித்து, நிற்போமாக. இவ்வளவு பெரிய கஷ்டத்தைத் தாங்கிக்கொள்வோமானால், இனி நமது வாழ்நாளிலே நம்மை வதைக்கக்கூடிய அளவுக்கு ஆற்றலை, எந்தக் கஷ்டமும் பெறமுடியாது. அவர் மறைந்தார் — அவரை அவனி மறவாது — இவருக்கு இருந்த மன உறுதியில் ஆயிரத்திலோர் பாகமேனும் நாம் பெற்றால்தான், அவனி நம்மைமக்கண்டு, அவர் வாழ்ந்த நாட்டுமக்கள்தான் இவர்கள் என்று கூறும்,

மனிதருள் இருந்துகொண்டு, சமயம் கிடைக்கும்போதெல்லாம் வெளிவந்து வெறிச்செயல் புரியும் மிருகத்தை அடக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும், அகில உலமுகம் இந்த துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள புதிய நிலையைக் காப்பாற்ற, இந்த உறுதியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஏகாதிபத்தியக் கோட்டையைத் தகர்த்து, யுக யுகமாக மூடிக்கிடந்த ஆலயங்களைத் திறந்து, மக்களிடையே புதிய மாண்பைக் காண்பதற்குத் தளராமல் பாடுபட்டு வந்த புனித புருஷரை இழந்துவிட்டோம்—நமது வாழ்நாளிலே நேரிட்ட இந்த மகத்தான நஷ்டத்துக்கு, பலப்பல தலைமுறைகளுக்குப் பிறகும் ஈடு செய்யக் கூடிய நிலை வராது.

இந்து மதத்தில் ஏறிப்போய், ஊறிப்போய் இருந்த கேடுகளை எல்லாம், தமது பரிசுத்த வாழ்க்கையால், நீக்கும் காரியத்தில் அவர் ஈடுபட்டிருந்தார். இந்த அரும் பணியால், அன்பு மார்க்கம் தழைக்கும், அனைவரும் ஆண்டவனின் குமாரர்களே என்ற உண்மை துலங்கும் என்று மனமார நம்பினார் அந்தோ! இந்த அகத் தூய்மையோ புறத் தூய்மையோ, நெடுங்காலமாகக் குவிந்து வளர்ந்துபோயுள்ள மத வெறியர்களைத் திருத்தாதே, என்று கூறிவந்தோம் — அவர் யாரிடமிருந்து அன்பு மார்க்கத்தை எதிர்பார்த்தாரோ, அங்கிருந்தே அவர் உயிரைக் குடிக்கும் ஒரு வெறி பிடித்த இந்து கிளம்பினான். இவன் இந்து மார்க்கத்தையும், இந்து அரசையும் நிலைநாட்டும் நோக்கம் கொண்டவன் என்று கூறப்படுகிறது. ஹைதராபாத் சமஸ்தான சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொண்டவனும். பெயர் நாதுராம் விநாயக்கோட்சே உலகை நோக்கி நமது உள்ளத்தை நோக்கி, "உத்தமரை வீழ்த்திவிட்டான் ஓர் உலுத்தன். அவருடைய உடலை நாங்கள் இழந்துவிட்டோம் — அவருடைய உத்தமக் கொள்கைகளின் மூலம், அவர் இனி என்றென்றும் வாழ்வார். இந்தத் துக்க நாளன்று, அவர் எங்கள் ஒவ்வொருவருடனும் கலந்து விட்டார் — இனி அவரை எங்களை விட்டுப் பிரிக்க முடியாது.

யமுனைக் கரையிலே; அவருடைய சடலத்தைக் கொளுத்தினோம். ஆனால், வீடு திரும்புமுன், எங்கள் உள்ளங்களிலே அவர் இடம் பெற்றிருப்பதைக் கண்டோம். அவர் இதோ இருக்கிறார். எங்கள் நற்குணத்துக்கும் நல்ல நடத்தைக்கும் காரணமாக விளங்கி வருகிறார்'' என்று கூறவேண்டும் — சொல்லால் மட்டுமல்ல, செயலால் — அனைவரும்.



# அவர் காண விரும்பிய

# ★ நாடு ★

''பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கவேண்டும். மக்களில், உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக் கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்யோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்.''

இதுவே, உலக உத்தமர் காந்தியாரின் இலட்சியம், என்று அறிவிக்கிறார் பண்டித நேரு.

ஒரு நாடு, அன்னியரிடம் அடிமைப்பட்டு, விடுதலைப் போர் தொடுத்து, பிறகு தன்னாட்சி பெறுவது. மகத்தான தோர் சம்பவம் — உலக வரலாற்றில், ஒவ்வொரு சமயம், படைபலத்தாலோ இராஜதந்திர பலத்தாலோ, ஏதேனும் ஒரு நாடு பிறநாடுகளை அடிமைகொள்வதும், அடிமைபட்ட நாட்டின் செல்வத்தைச் சுரண்டுவதும், உலக வரலாற்றிலே, எங்கோ ஓர் மூலையிலே காணப்படும் சிறு விஷயமல்ல — அந்த வரலாற்றிலே, மிக முக்கியமான பகுதியே, இந்தச் சம்ப வத்தைக் கொண்டதுதான்.

அலெக்சாண்டர், ஜூலியஸ் சீசர் போன்ற ஆதி மகா வீரர்கள் கால முதற்கொண்டு, பெர்லின் சர்வாதிகாரி ஹிட்லர் காலம் வரையிலே, இந்த நாடு பிடிக்கும் போக்கு, இருந்த வண்ணமிருக்கிறது. அவர்கள் காலத்திலே, போர்த்திறனோடு வீர உணர்ச்சியும் தன்னம்பிக்கையும் ஊட்டப்பட்ட மக்கள் உண்டாயினர். அந்தந்த நாடுகளில் அவர்களைப் பலி கொடுத்து அந்த மாவீரர்கள் மண்டலம் பலவென்று கடைசியில் மாநிலம் முழுவதையுமே தமது ஏகபோக ஆட்சியின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற பேராசைகொண்டு, நின்றனர். அதேபோது, போதுமான பலமும், தக்க தலைவரும் இல்லாமல், உள்நாட்டுக் குழப்பமும் பேத நிலையும் கொண்டு இருந்த நாடுகள், புயலில் சிக்கிய நெடு மரங்களெனச் சாய்ந்தன. சரிந்த அரசுகளின் மீது, வெற்றி பெற்றவர்கள், சர்வாதிகாரம் செலுத்தினர். அடிமைப்பட்ட நாடுகளிலே, மக்களின் அழுகுரல் கிளம்பி பிறகு, விம்முலதாகி அது குறைந்து பிறகு ஏக்கமாகி, பிறகு, அதை வெளியே காட்டுவதும் குற்றம் என்று கோல்கொண்டோன் மிரட்ட, அதனையும் நீக்கிவிட்டு உணர்ச்சியற்றுப்போன நிலையும் பிறந்ததுண்டு. ஆனால் இந்த இருள், நிலைத்திருப்பதில்லை — ஒளி கிடைக்க, தாமதம் ஏற்படினும்; இடையே சொல்லொணுச் சங்கடம் விளையினும், விடுதலைச் சுடரொளி, எப்படியும் கிளம்பி தன் வேலையை வெற்றிகரமாகச் செய்து வந்திருக்கிறது. அவ்வப்போது, ராணுவ பலத்தால் அமைக்கப்பட்ட பல்வேறு சாம்ராஜ்யங்கள், சில பல காலத்துக்குப் பிறகு, சிதறி, பழையபடி, தனி அரசு கொண்ட பல நாடுகளாகிவிட்டன. விடுதலைப் போர் முரசொலி, அடியோடு எங்கும் எப்போதும், அழிந்துபடுவதில்லை. முரசு இருந்து, அதைக்கொட்டும் திறம் உடையோர் முன் வராமல் இருந்ததுண்டு; முரசறையும் திறமுடையோர் இருந்து, முரசு அமையாது இருந்ததுண்டு. ஆனால், அடிமைப்பட்ட எந்த நாடும், எப்பாடுபட்டேனும், எத்தனை முறை தோற்றேனும், விடுதலையைப் பெறுமல் போனதில்லை. ஏறத்தாழ, இயற்கையின் கட்டளை, இந்த விடுதலை வேட்கை. எனவேதான், எவ்வளவு பெரிய பலமுள்ள

நாட்டின் பிடியிலே சிக்கிவிட்டாலும். ஒருநாள், விடுதலை பெறுவோம் என்ற எண்ணம், கருகுவதில்லை.

விடுதலைப்போர் நடத்தப்படும் காலம், நாட்டின் வரலாற்றிலே சுவையுள்ள பகுதி வீரச்செயல்கள், தியாக நிகழ்ச்சிகள் நிரம்பிய பகுதி. குன்றுகள் கோட்டைகளாகி, வீதிகள் போர்முகாமாகி, வீடுகளெல்லாம் பாசறையாகி, நாட்டுமக்கள் வீரர்களாகும் வேளை அது. அப்போதெல்லாம் அவர்களின் ஒரே நோக்கம், ஒரே லட்சியம், தன்னாட்சி பெறுவது என்பது தான். தோட்டத்துக்குள்ளே புகுந்து புலியை விரட்டி அடித்துக் கொல்ல வேண்டுமென, தோட்டக்காரர் தன் துணைவருடன் கூடி ஆயுதமெடுத்து, புலி தப்பி ஓடாதபடி நாற்புறமும் நல்ல முறையில் காவல் அமைத்து, தீரமாக உள்ளே நுழைந்து புலியுடன் போராடுகிறபோது, எப்படியாவதுஇந்தப் புலியை அடித்துக் கொன்றுவிட்டால் போதும் என்ற ஒரே எண்ணம்தான் தோன்றும் புலி கொல்லப்பட்டதும், ''அப்பா! கொன்றுவிட்டோம் புலியை; இனிப் பயமில்லை'' என்ற ஆறுதல் தோன்றும் — ஆயாசமும் ஏற்படக்கூடும். அது போலவே பல்வேறு நாடுகளிலே, விடுதலைப்போர் நடந்த காலங்களிலெல்லாம், எப்படியாவது, நம்மை அடிமைப் படுத்திய அன்னிய ஆட்சியை ஒழித்து நாட்டிலே தன்னாட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரே எண்ணம். ஒரே இலட்சியமே தலைசிறந்து விளங்கிற்று. அந்த ஒரே குறிக்கோளுடனேயே. மக்கள் வீரமாகப் பணியாற்றினர் — அவர்களை நடத்திச்சென்ற தலைவர்களும் பல நாடுகளிலே விடுதலை வேட்கையை மட்டுமே, முக்கியமானதாக்கினர். பல நாடுகளிலே, விடுதலை கிட்டியதும், மக்கள், தமது நோக்கம் ஈடேறிவிட்டது; அன்னியன் விரட்டப்பட்டான். தாய்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது. சுதந்திரக்கொடி கெம்பீரமாகப் பறக்கிறது. ஆகவே, நமது வேலை முடிந்தது, இனிச் சொந்த வேலையைப் பார்ப்போம் என்று எண்ணி அங்ஙனமே, பழையபடி ''பிரஜைகள்'' ஆகிவிடுவதே முறை எனக் கொண்டனர் – புலியைக் கொன்றான் பிறகு தோட்டக்காரன்,

தன் வேலே முடிந்தது என்று எண்ணிவிடுவதுபோலவே, புலி புகுந்ததால் ஏற்பட்ட சேதம். புலியைக் கொல்ல போரிட்ட தால் உண்டான சேதம், ஆகியவைகளைப் போக்குவது, வேறு ஏதேனும் துஷ்ட மிருகங்கள் புகாதபடி பாதுகாவல் அமைப் பதுபோன்ற காரியங்களைக்கூட தோட்டக்காரன்வெற்றிபெற்ற மகிழ்ச்சியால், கொஞ்சகாலம் பொறுத்துத்தான் செய்ய முற் படுவான். அதுபோலவே, அடிமைப்பட்டிருந்தபோது ஏற் பட்ட அவதிகளையும் அல்லல்களையும் துடைத்திடும் அரும் பணியை, விடுதலைப் போரில் வெற்றிபெற்ற பல நாடுகள் செய்யாமல் இருந்துவிட்டதுண்டு. காலங்கடந்தபின் செய்யத் தொடங்கியதுண்டு.

இந்தியாவின் விடுதலை சம்பந்தமாகக் கவனித்தாலோ, இவை போல மட்டுமல்ல, மற்ற நாடுகளிலே, ஏற்படமுடியாத நிலைமை இங்கு இருக்கக் காணலாம்.

அடிமைப்பட்ட பல நாடுகளிலே, சுதந்திரம் வேண்டும் என்பது மட்டுமே பிரச்னை—இங்கோ, சுதந்திரமும் வேண்டும், புதுசமுதாய அமைப்பும் வேண்டும் என்று கேட்க வேண்டிய நிலைமை இருந்தது. இங்கோ, விடுதலை வேண்டும் என்று போராடத் தொடங்கியபோது, அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும் என்பது மட்டும் முழக்கமாக இல்லை அந்த ஒரு முழக்கம் மட்டும் போதுமானதாகத் தெரியவில்லை. அன்னிய ஆட்சிமட்டும் தொலைந்தால் போதும் என்ற அளவுடன், நின்றுவிட மனமில்லை. ஏனெனில் இந்நாட்டு அமைப்புமுறை. தேவையான வேறு பல இலட்சியங்களைக் கொள்ளவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டது. எனவேதான் இங்கு சாதாரண மாக, அடிமைப்படுத்தப்பட்ட மற்ற நாடுகளிலே, அன்னிய ஆட்சி ஒழியவேண்டும் என்ற ஒரே முழக்கம் மட்டும் கிளம்பி யது போலல்லாமல்,

அன்னிய ஆட்சி ஒழியவேண்டும்,
மக்களாட்சி மலரவேண்டும்
இந்து—முஸ்லிம் ஒற்றுமை வேண்டும்,
தொழில்கள் பெருகவேண்டும்.

கல்வி பரவ வேண்டும்.
ஜாதி பேதம் ஒழிய வேண்டும்,
தீண்டாமை போக வேண்டும்.
கிராமம் சீர்பட வேண்டும்.
வறுமை போக வேண்டும்.
சுரண்டல் முறை ஒழிய வேண்டும்,

என்ற வேறு பல இலட்சிய முழக்கங்கள் கிளம்பின, மற்ற நாடுகளிலே நடைபெற்ற விடுதலைப் போர் நடந்தபோதும். அதற்குப் பிறகும் உள்ள சூழ்நிலைக்கும், இது ஓர் மகத்தான வித்தியாசம் — இதிலேதான், எதிர்காலத்தை உருவாக்கும் சூட்சமம் இருக்கிறது,

சூதாடி ராஜ்யத்தைத் தோற்றுவிட்ட நளன் மீண்டும் ராஜ்யத்தைப் பெற்ற கதைக் காலத்திலிருந்து மகத ராஜ்யத்தை சேதி நாட்டரசன் பிடித்துக்கொண்டான், என்றுள்ள சரிதக் காலம் வரையிலே, ஒரு ராஜ்யம் ஒரு அரசன் கரத்திலிருந்து வேறோர் அரசனிடம் சிக்கி, மீண்டும், சொந்த அரசனிடம் வந்து சேரும் சம்பவம், கொடிகள் மாறுவது, அதிகாரிகள் மாறுவது என்ற இவ்விதமான அளவோடுதான் இருக்கும். ஆனால், இக்காலத்தில், அதிலும் இந்தியாவில், நடைபெற்ற விடுதலைப் போர், கொடி மாற்றமோ, அதிகார மாற்றமோ மட்டும் குறிக்கோளாக அமைந்ததல்ல. தன்னாட்சிமட்டுமல்ல, இலட்சியம்; அந்தத் தன்னாட்சி மக்களாட்சியாக, அந்த மக்களாட்சியும் நல்லாட்சியாக, அந்த நல்லாட்சியும் மக்களுக்குப் புதிய வாழ்வை, முழு வாழ்வைத் தரக்கூடிய ஆட்சியாக அமைதல் வேண்டும் என்ற இவ்வளவு உன்னதமான இலட்சியத்தையும் உண்டாக்கியதுதான் — எனவேதான் இங்கு. விடுதலைப் போரின்போது கிளம்பியது ஒரு முழக்கமல்ல, பல; ஒரே ஒரு குறுகிய இலட்சியமல்ல. பரந்த இலட்சியம். எனவே தான் மறைந்த உத்தமர் அன்னியராகிய வெள்ளையர் நீங்கிய, இந்தியர் அரசாள்கிற இந்தியாவைக் காண்பதே எனது இலட்சியம் என்றுமட்டும் கூறுமல், பண்டிதர் எடுத்துக் காட்டியதுபோல,

ஏழை ஈடேறவேண்டும்.

ஏழை உரிமை பெறவேண்டும்,

ஜாதிபேதம் ஒழியவேண்டும்.

ஒற்றுமை மலரவேண்டும்.

என்று கூறினதுடன். 'இத்தகைய இந்தியா உருவாகவேண்டும். அதுவே என் இலட்சியம், அதற்கே நான் பாடுபடுகிறேன்' என்றும் கூறினர். மற்ற நாடுகளின் நலிவு அன்னிய ஆட்சியின்போது, அதன் விளைவாகவே ஏற்பட்டதால், அந்த நாடுகளிலே தோன்றிய தலைவர்கள், நாட்டின் நலிவை நீக்க அன்னியரை விரட்டினலே போதும் என்று கருதினர் — அவர்கள் அங்ஙனம் கருதினதில் தவறுமில்லை, அதுபோல இங்கு அன்னியர் விரட்டப்பட்டு, நாடு, தன்னாட்சி பெறுவது மட்டுமே போதும் என்று கருதினல், நிச்சயமாகத் தவறு — ஏனெனில் இங்கு, அன்னிய ஆட்சியினல் மட்டுமல்ல அதற்கு முன்பிருந்தே, நமக்கென்று தோன்றிய சில அரசர்களாலும் அவர்கள் அனுஷ்டித்த முறைகளாலும், நமது சமூக அமைப்பினாலும் அதன் பயனாக ஏட்பட்ட பழக்க வழக்கங்களாலும் நமது வாழ்க்கை இலட்சியத்தினாலும் அதை ஒட்டி கட்டிவிடப்பட்ட வெட்டி வேதாந்த முறைகளினாலும், நமது மத அமைப்பினாலும் அதைப் பயன்படுத்திக்கொண்ட தந்நலக்காரரின் போக்கினாலும், பலப்பல கேடுகள் முளைத்துக் காடெனக் கிடந்தன. எனவே அன்னிய ஆட்சி அகன்றல் நாட்டின் நலிவு நீங்கிவிடும் என்ற அளவோடு அடிகள் நிற்கவில்லை—அன்னிய ஆட்சியை நீக்குவதுடன், மக்களாட்சிக்கு, நல்லாட்சிக்குத் தடையாக உள்ள சகல கேடுகளையும் நீக்கியாகவேண்டும் என்று தெளிவாகக் கூறினர்.

அவர் காண விரும்பிய காட்சி இந்தியர் ஆளுகின்ற இந்தியா என்பது மட்டுமல்ல, தீண்டாமை அடியோடு ஒழிந்து, மதத்தின் மாசும் தூசும் போக்கப்பட்டு, ஜாதி பேதம் களைந்தெறியப்பட்டு, ஏழையின் வாழ்விலே புதியதோர்

கிளர்ச்சி ஏற்பட்டு நாடு, இலட்சிய பூமியாக இருக்க வேண்டும் என்பதாகும்.

நான் காணவிரும்பும் இந்தியா இவ்விதமானது—என்று உரைத்துவிட்டார். உயிர் துறக்கும் நேரம் வரையிலே அதற்காகவே உழைத்தார்—அவர் உயிர் பிரியும்போது, அவருடைய மனக்கண்முன், எத்தகைய இந்தியா தெரிந்திருக்கும்? அவர் காணவிரும்பிய காட்சியா ! அல்லவே ! அவர் காணவிரும்பிய இந்தியாவில் கோட்சே இருக்கமுடியுமா — இருக்க இடமுண்டா? அவர் காணவிரும்பிய இந்தியாவில் சேரிகள் உண்டா? அவர் காணவிரும்பிய இந்தியாவில், ஜாதிபேதக் கொடுமை இருக்குமா? அவர் காண விரும்பிய இந்தியாவில், ஏழையின் வாழ்வு இருண்டுகிடக்குமா? அவர் அவ்விதமான இந்தியாவை அல்ல, ஏழைக்கு வாழ்வுதரும் இந்தியாவை-எல்லோரும் ஓர் குலம் என்ற இலட்சியத்தைக்கொண்ட இந்தியாவைக்—காண விரும்பினர். அந்த இலட்சிய பூமியை உருவாக்குவதையே பணியென்று கொள்வதுதான், அவருடைய காலத்திலே பிறந்தவர்களின் கடமை—அப்போதுதான் எதிர்காலத் தலைமுறைகள், 'உத்தமர் மறைந்தார் – ஆனல் அவருடைய உள்ளத்திலிருந்த இலட்சியத்தை, அவர் காலத்தவர், உருவாக்கிக் காட்டினர்' என்று பெருமையுடன் பேசுவர். விடுதலைப்போர், அந்நிய ஆட்சியாளரிடமிருந்து நாட்டை மீட்பது என்ற அளவோடு மட்டும் உள்ளது என்ற முறையிலே அவர் கொள்ளவில்லை—அறிவித்தது அதுவல்ல—ஒரு இலட்சிய பூமியைக் காட்டிவிட்டுச் சென்றிருக்கிருர். நாட்டை அன்னிய ஆட்சியிலிருந்து விடுவிக்கும் விடுதலைப் போர்க் கட்டம், அன்னியப் படை பலத்துக்கு மட்டுமே நாம் பயப்படக்கூடிய நிலையை உண்டாக்கக் கூடியது. விண்ணிலிருந்தும், மண்ணிலிருந்தும், கடலிலிருந்தும் அன்னியர், எதிர்த்து அடிப்பர், விடுதலைப் போரின் மற்றோர் கட்டத்தின் போது மறைந்தவரின் மனக்கண்முன் தோன்றிய நாடு உருவாவதற்காக நடத்தப்படும் விடுதலைப் போரின்போது, அன்னியரிடமிருந்தல்ல, நம்மவரிடமிருந்தே, விண், மண், கடல் எனும் இடங்களிலிருந்து மட்டுமல்ல, தம் ஒவ்வொருவர் மன

திலேயே இருந்துங்கூட, சந்தேகம், பயம், சஞ்சலம், நம்பிக்கைக் குறைவு, பழக்க வழக்கம் ஏற்படுத்தியதால் உண்டான பற்று பாசம் ஆகிய வெவ்வேறு எதிரிகள் கிளம்பக்கூடும்-இவைகளை எல்லாம் முறியடிக்கவேண்டும். உலகம், இதை நாம் செய்யமுடியுமா; நமக்கு அந்த ஆற்றல் இருக்கிறதா என்று பார்க்கக் காத்துக்கொண்டிருக்கிறது. நாம் அவருடைய காலத்தவர், அவருடைய கருத்துக்களை அறிந்தவர்கள், என்பதற்கு, நாம் உதிர்த்த கண்ணீர் மட்டும் உலகுக்கு அத்தாட்சியாகி விடாது. அவர் எத்தகைய இந்தியாவைக் காண விரும்பினாரோ, அதை உருவாக்கும் அரும்பணியை நாங்கள் ஏற்று நடத்துகிறோம்பாரீர் என்று கூறி, வெற்றிகரமாக நடத்துவது தான், தகுதியான அத்தாட்சியாகும். அவர் காண விரும்பிய இந்தியாவை, மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவருவோம்.

ஏழை ஈடேறி ஏழை உரிமை பெற்று விளங்கும் நாடு.

மக்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற நிலை இல்லாத நாடு.

எல்லோரும் தோழமையுடன் வாழும் நாடு.

இந்த நாடு — காந்தி நாடு—காண்பதுதான், நமது தலைமுறைக்கு உள்ள வேலை. இதைச் சாதிக்க, அனைவரும் ஒன்றுபட, நமது தலைவர்களெல்லாம் கூடிப்பேசி, அனைவரின் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி, இந்த அரும்பணியை வெற்றிகரமாக முடிக்கவேண்டும். நாடெங்கும், நகரெங்கும், இலட்சக் கணக்கிலே கூடினர் மக்கள் – அவர்கள் மறைந்த உத்தமருக்குத் தமது கண்ணீரை அர்ப்பணித்தனர் – அவர் காட்டிய வழிச்சென்று தீட்டிய சித்திரத்தைக் காண, இனிப் புதியதோர் ஆர்வத்துடன், அனைவரும் ஒன்றுபட்டுப் பணிபுரிய மக்களுக்கு நேர் வழி காட்டுவதும், ஒற்றுமைக்கான திட்டம் தீட்டுவதும், தலைவர்கள் கடமை.

## அவர் வாழ்க்கையில் ஓர் சம்பவம்.

1893-வது ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் ஒரு வழக்குக்காகச் சென்றிருந்தார். தலைப்பாகையுடன்

கோர்ட்டுக்குச் சென்றிருந்ததைக் கண்ட நீதிபதி தலைப் பாகையை அகற்றும்படி உரைத்தார். காந்தியடிகள் அங்ஙனம் செய்ய மறுத்துக் கோர்ட்டை விட்டு வெளியேறினர். செய்கையைக் கண்டித்துப்பத்திரிகைகளுக்கு எழுதினர்.

இன்னொரு சமயம், பீரிடேரியா என்னும் இடத்துக்கு முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தார். நிறத்திமிர் கொண்ட ஒரு வெள்ளையன், ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளின் உதவியைக்கொண்டு முதல் வகுப்பு வண்டியினின்றும் கீழே இறக்கிவிட்டான். இத்தகைய கொடுமைகளை, காந்தியடிகளுக்கு வெள்ளையரின் நிறத்திமிரை ஒழித்துக்கட்ட உறுதி கொள்ளும்படிச் செய்தது, கடைசியில் வெள்ளையரின் ஆதிக்கமே இந்நாட்டில் ஒழிந்ததற்கு உத்தமரின் ஓயா உழைப்பே காரணமாயிற்று.

# அவர் சிந்திய இரத்தம்

மகாராஜாக்கள் இருந்தனர்—இன்றும் இருக்கின்றனர்.

மடாதிபதிகள் இருந்தனர்—இன்றும் இருக்கின்றனர்,

மாயா ஜாலம், மகேந்திர ஜாலம் தெரியும் என்று கூறிக் கொண்டவர்கள் இருந்தனர்—இன்றும் இருக்கின்றனர்,

ஆரூடம் கணித்து, இனி இன்னின்னபடி ஆகும் என்று கூறும் ஆற்றல் எமக்குண்டு என்று கூறுபவர்கள் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர்.

யோகம் தெரியும், ஆண்டவனைக்காட்ட எம்மால் முடியும், அகிலமெல்லாம் அடக்கிடும் வித்தை தெரியும் என்று பேசினவர்கள் இருந்தனர்—இன்றும் இருக்கின்றனர்.

அவர்கள் இருந்தனர். என்பது மட்டுமல்ல, நிலைமை.—

மகாராஜாக்களுக்கு வரி செலுத்திக்கொண்டு பயபக்தி விசுவாசம் காட்டிக்கொண்டு, மக்கள் இருந்தனர்.

44868

அந்த மகாராஜாக்கள், தேவகட்டளையால் பூர்வபுண்ணிய வசத்தால், சிங்காதனம் ஏறும் பாக்கியம் பெற்ருர்கள் என்று மக்கள் எண்ணினர்.

மத குருமார்களின் தங்கப் பல்லக்குக்கு காணிக்கை செலுத்தினர். திரு அருளால் அவர்கள் திவ்விய புருஷர்களானுர்கள். ஆகவே அத்தகையவர்களின் "தெரிசனமே" பாபத்தைப் போக்கும் என்று மக்கள் எண்ணினர் அந்த மத குருமார்கள் மனம் வைத்தால், எதுவும் நடைபெறும் என்று மனமார நம்பினர்.

மாயவித்தை தெரிந்தவர்களால், துஷ்ட தேவதைகளைக் கட்டுப்படுத்த முடியும், அவர்கள் கூப்பிட்ட உடனே குட்டிச் சாத்தான் ஓடிவருவான், நெருப்பு தண்ணீராகும், நீர் நெருப்பாகும், ஆளை மிருகமாக்குவான், மிருகத்தை ஆளாக்குவான் என்றெல்லாம் நம்பினர் அவர்களிடம் பயப்பட்டனர் — அவர்களின் மிரட்டலைக் கண்டு அடிபணியவும் சம்மதித்தனர்.

யோகிகளால் புவனத்தை அடக்கமுடியும், தேவ இரகசியத்தை அறிய முடியும், அவர்களிடம் அபாரமான ஆற்றல் உண்டு. அவர்கள் நினைத்தால் அதுபோலவே நடைபெறும் என்று எண்ணினர் யோகிகளையும் பொதுவாகவே சாது சன்யாசிகளையும், மக்களை ஈடேற்றும் மகத்தான சக்தி வாய்ந்தவர்கள் என்றே கருதித் தொழலாயினர்; அவர்களின் அருளைப்பெற ஆவல் கொண்டனர்.

அப்படிப்பட்டவர்களெல்லாம், ஆங்கில ஆட்சி இங்கே ஏற்பட்டதைத் தடுக்கவில்லை — ஏற்பட்டபிறகு தத்தமது ஆற்றலை உபயோகித்து, அதை எதிர்த்து ஒழிக்கவில்லை ஏன் அதைச் செய்யவில்லை என்று மக்கள் கேட்டதுமில்லை.

அவர்கள் இருந்தனர் — மக்கள் வணங்கி வந்தனர். ஆங்கிலேயனும் வந்தான்; மக்கள் அவர்களிடம் அஞ்சிக்

கிடந்தனரேயொழிய, "ஐயன்மீர்! உமக்குள்ள ஆற்றலிலே ஆயிரத்திலோர் பாகமேனும் செலவிட்டால், இந்த ஆங்கிலேயன் மிரண்டோடுவானே, அதைச் செய்யலாகாதா" என்று கேட்கவில்லை அவர்களின் ஆற்றலோ, அல்லது "கால தேச வர்த்தமானத்திலோ" ஆங்கிலேயன், எப்போது தான் போய்த் தொலைவான் என்பதைக் கூறும்படி ஆற்றல் மிக்க ஆரூடக்காரனையும், மக்கள் கேட்டதில்லை. அவர்களும் மீனுவுக்கும் முத்துவுக்கும் பொருத்தம் பார்ப்பது, மேஷ ரிஷபக் கணக்குக் கூறுவது என்று கூறிக்கொண்டிருந்தார்களேயொழிய, கிரிப்ஸ் திட்டம். புதிய சட்டம் என்ற இவைப் பற்றி ஏதும் கணக்கெடுத்துக் கூறினதில்லை.

அவர்களெல்லாம் அன்னிய ஆட்சியைத் தடுக்க முடியாமலும், போக்கியாக வேண்டுமே என்று எண்ணுமலும் இருந்தனர் என்றாலும், மக்கள், அவர்களிடம் வழக்கப்படி, மரியாதை காட்டியும், காணிக்கை செலுத்தியும்: பயபக்தி விசுவாசத்தோடும் இருந்துவந்தனர்,

இவர்களின் கண் முன்னாலே, வெள்ளைக்காரர்கள் உலவினர் — இவர்கள் அக்காட்சியைக் கண்டு நமது ஆற்றல் பயனற்றுப் போயிற்றே என்று வெட்கித் தலை குனியவுமில்லை— தங்களிடம், மக்கள் எவ்வளவு மரியாதை காட்டுகிறார்கள் என்பதை அன்னியனுக்குக் காட்டி, உனக்கு ஒருவகையிலே செல்வாக்கு, எங்களுக்கு மற்றோர் வகையிலே என்று கூறிக் கொள்ளும் முறையிலேயே நடந்துகொண்டனர். மக்களோ நம்மை ஆண்டு ரட்சிக்க, பலபேர் உள்ளனர்; அவர்களிலே ஆங்கிலேயனும் ஒருவன்போலும் என்று எண்ணிவிட முடிந்ததேயொழிய, இவ்வளவு ஆற்றல் படைத்த இவர்கள், ஏன் இன்னோர் அதிகாரியை அனுமதித்தனர் என்று சிந்தித்து, உண்மையில் இவர்களுக்கு ஆற்றல் இல்லை என்ற முடிவு செய்யவில்லை. சிந்திக்க இடந்தரவில்லை, பழக்கம். எனவே, அன்னிய ஆட்சி ஏற்பட்டதைத் தடுக்கமுடியாத சக்திகள் அன்னிய ஆட்சியின்போதும் மக்களை மட்டும், எப்போதும் போலவே, ஆதிக்கம் செலுத்திவந்தன.

"உங்கள் நாட்டு மன்னன் யார்?" என்று வெளியூரான் கேட்க, எங்கள் நாட்டு மன்னனு! மன்னர் என்று சொல்லு, இருவர் உளர்" என்று உள்ளூரான் கூற, "இருவரா! எவ்விதம் அம்முறை ஏற்பட்டது? யார் அவ்விருவர்?" என்று வெளியூரான் கேட்க, "எமது மன்னர் இருவர், ஒருவர் கர்நாடகம், மற்றவர் குண்டுவீசி, — குண்டுவீசி கர்நாடகத்தைத் தோற்கடித்தார் இப்போது இருவரும் எம்மை ஆள்கிறார்கள்" என்று உள்ளூரான் பதில் சொன்னால், எப்படி இருக்கும்! நமது நாட்டு மக்களை, யாரும் அவ்விதமாகக் கேள்வி கேட்கவில்லை. கேட்டிருந்தால், இப்படித்தான் ஏதேனும் ஓர் வேதனை கலந்த வேடிக்கை நிரம்பிய பதிலளித்திருக்கவேண்டி வரும். ஏனெனில், இந்தியாவிலே 500-க்கு மேற்பட்ட ராஜாக்கள், அதைவிட அதிகத் தொகையிலே மதத்தின் பெயர் கூறி மக்களை ஆள்பவர்கள், யோகிகள், ஜாலம் ஜாதகம் தெரிந்தவர்கள், இப்படிப்பட்ட வேறு பலர். இவ்வளவு பேர் இருந்தும் இங்கிலீஷ்காரனும் வாழ்ந்தான்—"பத்தோடு பதினொன்று; அத்தோடு இதுவொன்று" என்று கருதி மக்கள் அவனையும் ஏற்றுக்கொண்டனர். அவனுக்கும் அடங்கி நடக்கலாயினர். புதியவனை அந்தப் பழைய சக்திகள் தடுக்கவுமில்லையே, அத்தகைய ஆற்றலைக் காணோமே, அவ்விதமிருக்க, நான் ஏன் அந்தப் பழைய சக்திகளை இனியும் போற்றவேண்டும், நம்பவேண்டும் என்று எண்ணத் தொடங்கினவர்களின் தொகை, மிகமிகச் சொற்பம். மற்றவர்களோ, வெள்ளையராட்சி ஏற்படுவதற்கு முன்பு எப்படிப் பேசி வந்தனரோ பயபக்தியுடன், அதே முறையிலேதான் அந்தப் பழைய சக்திகளைப்பற்றிப் பேசிவந்தனர்.

"அவருக்கு அம்பாள் பிரசன்னம்"

"அவர் ஊமையைப் பேசச் செய்தார்"

"அவர் அனுமத் உபாசி"

"இவருக்கு அடயோகம் தெரியும்"

"இந்த ராஜாவுக்கு 76 மனைவிமார்"

''இவர் கரு தரிக்கும்போதே ஆணு பெண்ணு என்று அறிந்து கூறினவர்''.

''இவர் காட்டேரியை ஏவி விட்டு விடுவதில் கைதேர்ந்தவர்''.

''இவர் மண் அள்ளிக்கொடுத்தால் பொன் ஆகும்''.

''இவர் நமது கடைப்பக்கம் வந்துபோனல் போதும், இலட்சுமி தாண்டமாடுவாள் நம்மிடம்'' என்ற இது போன்ற புகழுரைகள், நம்பிக்கையுரைகள் நடந்தவண்ணந் தான் இருந்தன. நாட்டை அன்னியரிடம் இழந்திருக்கின்ருேம், இவர்கள் இவ்வளவு அற்புத புருஷர்கள் என்றும் நம்புகிருேம். இந்த இரண்டும் எப்படிப் பொருந்தும் என்று எண்ணவுமில்லை. 'பழைய சக்திகளின்' பெருமை, ஆடாமல் அசையாமல் இருந்துகொண்டிருந்தது.

இவ்வளவு 'அற்புதவான்கள்', 'ஆற்றலுள்ளவர்கள்', 'மகாராஜாக்கள்' போன்றவர்கள், யாரும் மனதாலும் எண்ணுத மகத்தான காரியத்தை, ஒருவர் சாதித்தார்.

உத்தமர் காந்தியாரின் ஒப்பற்ற சக்தியை உள்ளபடி உணருவதற்கு, இந்தச் சூழ்நிலையை நன்கு தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். மனித சக்திக்கு மேற்பட்ட மகா சக்தி வாய்ந்தவர்கள் என்று மக்கள் பல காலமாக, தலைமுறை தலைமுறையாக, பழக்கமாக, யாராரை, அதாவது மகாராஜாக்களை, மத அதிபர்களை, யோகிகளை, சித்து விளையாடுபவர்களை, மற்றும் இது போன்றவர்களைப் பாராட்டியும் வணங்கியும் காணிக்கை செலுத்தியும் வந்தார்களோ, அவர்கள் யாரும், நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நற்குணமும் ஏற்பட வேண்டுமென்பதற்காக, உத்தமர் காந்தியார்போல் உழைத்து வெற்றிகண்டது போலக் கண்டதில்லை. அவர் பிறந்தபோது, வானத்திலே ஓர் ஒளி தோன்றிற்று—வாழ்த்துவதற்குத் தேவர்கள் கூடினர்; தீர்க்கதரிசி தோன்றுகிருர் என்று

இயற்கை முறை மாறித் தெரிவித்து–பட்டமரம் தளிர்த்தது – செத்தவன் பிழைத்திட்டான் வெட்டாமல் ஆறு தோன்றிற்று என்று எந்த அற்புத நிகழ்ச்சியும் ஏற்பட்டதாகக் கூறப்பட வில்லை. அவர், எல்லோரையும் போலவே பிறந்தார் — போர்பந்தர் சமஸ்தானத்திலே அவர் பிறந்த அன்று, வேறு எவ்வளவோ குழந்தைகள் பிறந்தன.

அவர் பிறந்த குலமும், குடும்பமும், குவலயம் அறிந்தது என்றோ, அருள் பெற்றது என்றோ, ஆலய அதிகாரம் படைத்தது என்றோ, அரசாள்வோரின் அந்தரங்க ஆதரவைப் பெற்றதென்றோ கூறுவதற்கில்லை. ஏழைக்குடும்பம் அல்ல — ஆனால் கோடீஸ்வரர்கள் அல்ல. அவர் சாதாரணத் தொட்டிலில் தவழ்ந்து கொண்டிருந்தபோது, தங்கத்தாலான தொட்டிலிலே படுத்திருக்க, தாதிமார் தாலாட்டும் பாடிக்கொண்டிருக்கும் நிலையில் சீமான் வீட்டுச் செல்வக் குழந்தைகள் எவ்வளவோ இருந்தன இந்தியாவில் ஐநூற்றுக்கு மேற்பட்ட சமஸ்தானங்கள். ஆயிரக்கணக்கில் ஜெமீன்கள், ஜாகீர்கள், காட்டு ராஜாக்கள், மேட்டுக்குடியினர், வணிக வேந்தர்கள், ஏராளமல்லவா — அவர்களின் வீடுகளிலெல்லாம், பிறந்த குழந்தைகள்போல, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, பிறக்கும் போதே, பிறரால் பெருமைப்படுத்தப்பட்டுத் தீரவேண்டிய செல்வமும் செல்வாக்கும் பெற்றவராக இல்லை.

கல்வித்துறையிலே அவர் பெற்ற வெற்றியும் கீர்த்தியும் கூட, வேறு எவ்வளவோ பேர் பெற்ற விதமானதுதான் – சிலருக்குக் கிடைத்ததைவிடக் குறைவும் கூட, பாரிஸ்டர் படிப்பில் தேறினார் – அவருடன் தேறினவர்கள் அநேகர் — அதற்குப் பிறகு, பாரிஸ்டர் ஆனவர்களின் தொகை ஏராளம்.

சிறு வயதிலேயே அவருக்கு அருள் கிடைத்தது. அம்மையப்பன் அவர்முன் தோன்றி, அகில உலகும் புகழும் நிலையை நீ பெறப்போகிறாய்—ஆகவே நீ, கிழக்குமுகமாகப் பார்த்தபடி பத்மாசனத்திலே அமர்ந்து, பத்து ஆண்டுகள் நம்மை நோக்கித் தவம் கிடக்கவேண்டும் என்று அருள, அம் மொழிப்

படியே அழகான ஆற்றோரத்திலே ஓர் பர்ணசாலை அமைத்துக் கொண்டு, மோகன்தாஸ் தவம் செய்தார் — அதன் பலனாக அவர்முன் மும்மூர்த்திகள் தோன்றினர் — என்று வழக்கமாகப் பெரியோர்களைப்பற்றிக் கூறப்படும் புராணமும் இவருடன் இல்லை,

ஆருடம் கூறுபவர்கள்கூட அவர் அகில உலகப் புகழ் பெற்றபிறகு, அவருடைய 'ஜாதகம்' அப்படிப்பட்டது என்று கூறினரேயொழிய, அன்னையின் மடியிலே குழந்தை தவழ்ந்த போது, ஆசானிடம் பாடம் கேட்டபோது, ஆங்கில நாட்டிலே படித்தபோது, ஆப்பிரிக்காவிலே உரிமைப்போர் துவக்கிய போதுங்கூட, அவர், அகில உலகும் அதிசயிக்கத்தக்கவராக விளங்குவார் என்று முன் கூட்டி ஆருடம் கூறவில்லை.

இவைகள் ஏதுமின்றி, நம்மில் ஒருவராகவே இருந்தார், ஆனால் இன்று நாமும், உலகிலுள்ள நல்லறிவாளர்கள் அனைவரும், உத்தமர், உலகைத் திருத்த உழைத்தவர் என்று உள்ளம் உருகி உரைத்திடத் தக்க உயர்நிலை அடைந்ததுடன், உலக வரலாற்றிலே. உன்னதமான இடம்மட்டுமல்ல நிரந்தர மான இடத்தையும் பெற்றுவிட்டார்.

முன்பு கூறியபடியே, அவருடைய பிறப்பு, வளர்ப்பு ஆகியவற்றிலே அற்புத சக்திகள் உடன் இருந்திருக்குமானால், அவருடைய இன்றைய உயர்நிலை குறித்து அதிசயப்படத் தேவையில்லை—அவர் அவ்விதமான சக்திகளோடு பிறந்தார் என்று கூறத் தோன்றுமேதவிர, அதிசயிக்கத் தோன்றாது. ஆண்டவனின் சக்தி அதனால் விளங்கிடும் அளவுக்கு அவர்பற்றி இராது. ஆனால் உண்மையான பெருமை. உண்மையான சிறப்பு, அவர் அவ்விதமாக அதிசயப் பிறவி யல்ல நம்போன்றவர் — ஆனால், நாம் கண்டு அதிசயிக்கத் தக்கபடியான உயர்நிலை பெற்றார் என்பதிலேதான் இருக் கிறது. தேன் இனிப்பாகத்தான் இருந்து தீரும். வாதம் தேவையில்லை அதை விளக்க ; சிபார்சு தேவையில்லை அதைப்

பருக தேன் எவ்வளவு இனிப்பாக இருக்கிறது தெரியுமா என்று கூறினால், கேட்பவர்கள் சிரித்துவிட்டு, இது என்ன பேச்சப்பா—தேன் இனிக்காமல் வேறெப்படி இருக்கும் என்று கூறுவர். அதுபோலவே தேவபுருஷர்கள், அற்புதம் புரிவோர் என்று முத்திரை பொறிக்கப்பட்டு, கதைகள் சேர்க்கப்பட்டு, உலகிலே உலவுவோர் உலகினரின் வணக்கத்துக்கு உரியவராவது சகஜம். ஆனால், மோகன்தாஸின் சிறுபிராய முதல், இதுபோல ஏதும் அதிசயம் நிகழாமலிருந்தும், அவர் இன்று அடைந்திருக்கும் உயர்நிலை, நமக்கு நாம் இதுவரை மறந்துபோன அதிசய புருஷர்களை எல்லாம்கூட நம் கவனத்துக்கும் கொண்டு வருகிறது என்றால், அந்த உத்தமருடைய உண்மையான பெருமை, இந்தச் சூட்சமத்திலேதான் இருக்கிறது. இதனைத்தான் உலக அறிஞர்கள் பாராட்டுகிறார்கள். கலமின்றிக் கடலைக் கடப்பது எப்படி அற்புதச் சக்தி என்று கருதவேண்டுமோ, அதுபோலவே, அற்புதப் பிறவி என்ற நிலை இன்றி எல்லோரையும் போலவே பிறந்து, எல்லோருக்கும் மேம்பட்டவராக, மகாத்மாவாக, மாநிலத்தவரால்கொண்டாடப்படுவது என்றால், அதுதான் உண்மையிலேயே உயர்வு.

இராமகிருஷ்ண அவதாரங்களோ, ஆழ்வாராதி நாயன்மார்களோ, சித்தர்கள் ஜீவன் முக்தர்களோ தாங்கள் மக்கள் உருவிலே இருக்கும்போதே, மக்களின் சுபாவத்தை மீறிய சக்திகளைப் பெற்றிருந்தனர் என்று கதைகள் உள்ளன. பூதகியைக் கொன்றார், தாடகையைக் கொன்றார், காளிங்க மடுவில் குதித்தார், கடலுக்கு அணையிட்டார் என்பன போன்ற கதைகள் மூலம், அவர்கள் கடவுள் என்ற கருத்து பரப்பப்பட்டது—எனவே அவர்கள் புகழ்பெற்று விளங்கியதிலே, நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆனால். இந்த உத்தமர்-மானிட குலம்-அந்தக் குலத்துக்கு எந்தவிதமான ஆற்றல் உண்டோ, அதேவிதம் பெற்றார்—இருந்தும், மானிட குலத்துக்கு வழிகாட்டி என்றும், உலகப் பெரியார் என்றும், எல்லா நாட்டிலேயும் போற்றப்படும் நிலையைப் பெற்றார். அவர் பெருமை இதிலேதான் இருக்கிறது — அவருடைய

மறைவால் உள்ளம் உருகும் நிலை ஏற்பட்டதன் முக்கிய காரணம் இதுதான்.

இராமகிருஷ்ணர்கள் என்ற புராண புருஷர்கள் போலல்லாமல், நமது காலத்தவர், மானிட குலத்தவர், மற்றவர் போலவே இயல்பான சக்திகளையே உடன்கொண்டு பிறந்தவர், எனினும், இன்று அவர், மற்றவர் சாதிக்காத காரியத்தைச் சாதித்திருக்கிறார். எனவேதான் நமது உள்ளத்திலே அவருக்கு உயர்ந்த இடம் கிடைத்திருக்கிறது

மக்கள் மனதிலே இடம் பெற்றார் என்பது மட்டுமல்ல, இந்த அளவு உயர்வுபெறுவதற்காக அவர் நாட்டின் நடவடிக்கைகளைக் கவனிக்க மறுத்து, மக்களின் சுக துக்கங்களைப் பற்றிய நடவடிக்கைகளிலிருந்து விலகி, யோகம், யாகம் செய்துகொண்டே இருந்து விடவில்லை. காதகனின் கைத் துப்பாக்கிக்குப் பலியாகும் கடைசி நிமிஷம் வரையில், மக்களோடு மக்களுக்கான காரியத்தை, தந்நலமற்ற முறையிலே, மகத்தான வெற்றியுடன் செய்து வந்திருக்கிறார் இதனைக் கவனிக்கும்போது, அற்புதம் செய்தவர்கள் என்போரிடம் ஏற்பட முடியாத பற்றும் பரிவும், மதிப்பும் இவரிடம் ஏற்படுகிறது. அழகிய ரோஜாவுக்கு, அற்புதமான வர்ணம் தீட்டிப் பார்க்க வேண்டுமல்லவா! நம்மைச் சொக்கவைக்கும் மயிலின் தோகைக்கு, பட்டாடை போர்த்த தேவையில்லையல்லவா! முல்லைக்கு மணமும், தேனுக்கு இனிப்பும், நாம் கூட்டத் தேவையில்லையல்லவா! அதுபோலவேதான், எந்த உத்தமரின் மறைவு கேட்டு உலகம் உருகி அழுகிறதோ, அவருடைய உயர்வுக்கு அவருடைய குணமும் செயலும், அவர்பெற்ற வெற்றிகளும், அதற்காக அவர் பட்ட கஷ்டங்களும், போதுமான காரணங்கள் — அவருடைய பெருமையை விளக்க நாம் ஏதும் புராணப்பூச்சு போடத் தேவையில்லை. அவர் குருடனுக்குப் பார்வை வரச்செய்தார் முடவனை எழுந்து நடக்கச்செய்தார். ஊமையைப் பேசவைத்தார், மாயாஜாலங்களைச் செய்தார், கந்துக மதக்கரியை வசமாய் நடத்திடும் சித்து விளையாடினார் என்று மகான்களைப்பற்றி

மக்களிடையே கதைகள் உலவுவதுண்டு. அவர்களில், யாரேனும் ஏதேனும் ஓர் அதிசயச் செயல் செய்திருப்பினும், அவர்களின் பெருமையையும் ஆண்டவன் அவர்களிடம் காட்டிய அன்பையும் விளக்கமட்டுமே அவை உதவும். யாரோ ஒருவருக்கு, யாரோ ஒரு மகான் கண் பார்வை வரச் செய்தார். குருடு யாருக்கும் ஏற்படாதபடிச் செய்துவிடவில்லை. மறைந்த உத்தமர், இப்படிப்பட்ட சித்துக்கள் விளையாடவில்லை சித்து விளையாடினவர்கள் செய்ததாகக் கூறப்பட்ட அற்புதங்கள், இவருடைய மகத்தான வெற்றிகளின் முன்பு, சிறு துரும்பு. ஒருவருக்குக் கண் பார்வை உண்டாக்கச் செய்த மகான்கள் இருக்கட்டும் ஒருபுறம் இது நமது நாடு, ஆங்கிலருக்கு வேட்டைக்காடு ஆகிவிட்டது – நாம் பலகோடி, அவர்கள் சில இலட்சம் நாம் அடிமைகள், அவர்கள் ஆட்டிப் படைப்பவர்கள் என்ற நிலை தெரியாதிருந்த குருடர்களாக நம் நாட்டவர் கோடிக்கணக்கிலே இருந்தனர்; மறைந்த உத்தமர், அவர்களின் கண்களைத் திறந்தார்; என்ன பேசுவது என்று தெரியாமல் வாய் அடைத்துப்போயிருந்த மக்களைப் பேசவைத்தார் - உரிமைப்பற்றி – உறுதியுடன் எப்படிப் பெறுவது என்று தெரியாமல், முடவன் நிலையில் இருந்தவர்களை கச்சைகட்டி நின்று, கடும் போரிட வைத்தார். பலகோடி மக்களுக்குப் பார்வை, பேச்சு, செயல், திறமை இவ்வளவையும் உண்டாக்கினர் இந்த உத்தமர். அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் கூறப்படும் அருளுடையார்கள் இருந்தபோதுதான், ஆங்கிலேயன் நம்மை அடிமைப்படுத்தினன். அந்த அடிமைத் தலைகளை உடைத்தெறிந்தவரை, அவர்களோடு சேர்த்துப் பேசுவது, அவருக்குக் கௌரவம் என்று எண்ணுபவர்கள், உத்தமரின் உயரிய பண்புகளைச் சரியாக உணராதவர்கள் என்றே பொருள்படும். அவருடைய வெற்றி

கள். மகத்தானவை-அவைகளைவிட மகத்தானது. அவர் உண்டாக்கிவைத்துவிட்டுப் போயிருக்கும், மாண்புகள் அன்னிய ஆட்சியை விலக்கவோ, அதற்கான விடுதலைப் போர் துவக்கும் உணர்ச்சியையும் உறுதியையும் மக்கள்பெறச் செய்யவோ முடியாதவர்களை எல்லாம், ''அற்புதம் தெரிந்தவர்கள், அருள்பெற்றவர்கள்'' என்று கூறிக்கொண்டிருந்தனர்—மக்களும் அதை ஏற்று அவர் அடிதொழுதனர். அதே போது, அவர்கள் யாரும் சாதிக்காததைச் சாதித்தனர். 1922ம் ஆண்டு பிப்ரவரி 16ந்தேதிய ''யங்இந்தியா'' பத்திரிகையில் ''என்னிடமிருப்பதா நான் சொல்லிக்கொள்ள விரும்பும் ஒரே குணம், சத்தியமும் அஹிம்சையும்தான். மனிதருக்கு மேற்பட்ட சக்தி எதுவும் எனக்கு இல்லை; திடசித்தமில்லாத மற்றவர்களுக்கு, கெடுதலை நாடிவிடக்கூடிய எந்தச் சதை உண்டோ, அதே சதையாலானவனே நானும்'' என்று எழுதினார்—இருபத்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பு.

இப்போதும், மக்களின் பாராட்டுதலைப்பெற்றுப் பூரிக்கும் 'பழைய சக்திகளிடம்' கேட்டுப்பாருங்கள்! இப்போதும், தமது வீரதீரத்தையும், அருள்பெற்று ஆற்றலுடையோராக இருப்பதையும் கூறுவர். அவர்கள் கூறட்டும் மக்கள் இனியும் அவர்களின் உரையை ஏற்கலாமா—அந்தப் பழைய சக்திகளைப் பாராட்டவும், அவைகளுக்கு வணக்கம் செய்யவும் முற்படுவது சரியாகுமா? முற்றும் துறந்த முனிவரின் சொந்த ஆஸ்தி இவைதான், என்று 'தினசரி' யில் ஒரு படம் வெளிவந்தது, காந்தியாரின் சொத்துக்களைக் காட்ட அந்தப் படத்தைக் கண்ட எவருக்கும் கண்ணீர் கசியாமலிராது! என்ன சொத்து? நூல்சரம், சிறு கரண்டி, தெர்மாஸ்பிளாஸ்க், ஒரு பவுண்டன் பேனா, ஒரு ஜதை காலணி இவை. அருள்

பெற்றவர்கள், யோகமறிந்தவர்கள். மக்களின் மோட்சலோக வழிகாட்டிகள் என்றெல்லாம் விருதுபெற்று துறவு நிலையும் கொண்டிருப்பதாகக் கூறுபவர்கள் இன்றும் பலர் உள்ளனரே, அவர்களின் சொத்துக்களை சற்று உங்கள் மனக்கண்முன் கொண்டுவந்து பாருங்கள்—எவ்வளவு ஆடை ஆபரணம்—தங்கத்தால் வட்டில் தட்டு முதலியன மட்டுமா, பாதக்குறடே தங்கத்தால்! இவர்களையும், முற்றும் துறந்தவர்கள், முனிவர்கள், மக்களின் அன்புக்குமட்டுமல்ல, ஆராதனைக்கும் பாத்திரராகக்கூடியவர்கள் என்று, இனியும் கொள்ள எப்படி மக்களின் மனம் சம்மதிக்கும்? சாதாரண காய்ச்சலுக்கு, ஒரு வைத்தியர் கொடுத்த மருந்து பயனற்றுப்போய், வேறொரு வைத்தியர் கொடுத்த மருந்து வேலை செய்து, ஜுரம் நீங்கிவிட்டால், என்ன சொல்கிறோம்? முன்னவரின் முறை சரியில்லை. மருந்து பயனில்லை என்று கூறிவிடுகிறோமே. இதோ ஒரு நாட்டின் நலிவை, மக்களின் நிலையை மாற்ற நமக்குத் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தவர்களால் முடியாமற்போனபிறகு, அவர்களைப்போல, 'நான் அற்புதம் புரியவன்' என்று கூறிக்கொள்ளாமல், பணிபுரிந்து, வெற்றிகண்டு, கடைசியில் நாட்டிலே வருப்பு மாச்சரியம் ஒழித்து, புது வாழ்வு ஏற்படவேண்டும் என்பதற்காக உயிரையே கொடுத்தாரே ஓர் உத்தமர். அவரைப் போற்றும் அதே வாயினால், எப்படி அந்தப் பழைய சக்திகளின் பிரதிநிதிகளைப் புகழ்வது? பழைய சக்திகளின் பிரதிநிதிகளும், இனியும், தாங்கள் ஆதிக்கம் செலுத்துவது அழகல்ல, அறமுமாகாது என்பதை அறிந்து, அவர்களின் போக போக்கிய நிலையையும், அதைக் காப்பாற்ற அவர்கள் கையாளும் முறைகளையும் விட்டொழித்து, உத்தமர் உரைத்த உயரிய கொள்கைகளை ஊருக்கு உரைக்கும் உயர் பணியில் ஈடுபட முன்வரவேண்டும். அவர்களுக்குத்

தமது சுகானுபவத்தை இழக்க மனம் வராது போகுமானால், மக்கள் இனித் தாங்கள் விழிப்புப்பெற்றுவிட்டதால், முற்றுந் துறந்தவர் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்ற இலக்கணத்தை உத்தமர் காந்தியாரின் வாழ்க்கையின் மூலம் தெரிந்து கொண்டுவிட்டதால் இனி மக்களை மயக்க, பழைய சக்திகள் கூறும் உறைகளை நம்பப்போவதில்லை. அந்த உறைகளின்படி அமைந்துள்ள முறைகளைக் கொள்ளப்போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தி, அன்பு நெறியை, அனைவரும் ஒரு குலம் என்ற அறநெறியைக் கைக்கொள்வோம், வேறு வழி வேண்டாம் என்று கூறி, புது வாழ்வு துவக்கவேண்டும். அந்தப் புது வாழ்வு பிறக்கவே, அவர் இரத்தம் சிந்தினார்.

# உலக உத்தமர் காந்தி

உலக உத்தமர், மறைந்ததால் உள்ளம் நொந்து கிடக்கும் நாம், ஒருவருக்கொருவர் ஆறுதல் மொழி கூறிக்கொள்ளும் நிலையிலே இருக்கிறோம் ஒரு கிழமைக்கு மேலாகிவிட்டது, இழிகுணத்தான், மானிலம் போற்றும் மகாத்மாவைக் கொலை செய்து உலகம் இன்றும் அழுதுகொண்டுதான் இருக்கிறது. அவருடைய மாண்புகளைப்பற்றிப் பேசாத நாடில்லை எழுதாத ஏடில்லை. எங்கும் கலக்கம் — ஏக்கம் — எவருக்கும் தாங் கொணாத் துக்கம். அதை மாற்ற அவரைப்பற்றி பேச முனை கிறோம் ஒவ்வொரு பேச்சும், மீண்டும் மீண்டும், கண்ணீரைக் கொண்டு வரவே உதவுகிறது. மூண்ட தீ அணையவில்லை— துக்கம் தரும் நிலை அது. ஆனால் அவர் புகழ் ஒளி பரவுகிறது. அதை எண்ணுவோம். ஆறுதல்பெற முயற்சிப்போம்

நாம் அரசுரிமை இழந்திருந்தபோது அவர் பிறந்தார்; அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்

அவர் பிறந்தபோது நமதுநாடு, உலகிலே இழிவும்பழியும் தாங்கிய நாடாக இருந்தது அவர் மறைந்திடுவதற்கு முன்னம், மாஸ்கோவிலிருந்து நியூயார்க் வரையிலே உள்ள சகல நாடுகளிலும் நமது விடுதலையை விளக்கும் விருது பெற்று, தூதுவர்களும், பிரதிநிதிகளும் வீற்றிருக்கும் நிலை உண்டாக்கிவிட்டது.

அவர் பிறந்தபோது உலக மன்றத்திலே, நமக்கு இடம் கிடையாது. இன்று, நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அவர் பிறந்தபோது, இங்கு தேவைப்படும் எந்தச் சாமானுக்கும், வெளிநாட்டின் தயவை நாடி, ஏங்கிக் கிடந்தோம். இன்று வெளிநாடுகள், நமது சரக்குகளைப் பெற நம்முடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்குத் தமது ராஜதந்திரத்தை உபயோகிக்கும் அளவு மாறுதலைக் காண்கிறோம்.

அவர் பிறந்தபோது, கோயில்கள் மூடிக்கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப்பட்டு வந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண் மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள் எல்லாம் திறந்துவிடப்பட்டன.

குடித்துக் கிடப்பது மிகச் சாதாரணம், சகஜம் என்று யாரும் எண்ணிக்கொண்டிருந்த நாட்கள், அவர் பிறந்த காலம். மதுவிலக்குச் சட்டம் அமுல் நடத்தப்படுவதைக் கண்டான பிறகே, அவர் மறைந்தார்.

அவர் பிறந்த காலத்திலே, சூரியனே அஸ்தமிக்க அஞ்சும் படியான அளவுள்ளதாக இருந்தது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். அந்த சாம்ராஜ்யத்தின் ஆதிக்கப் போக்கு அழிந்ததைக் கண்டான பிறகே, அவர் கண்களை மூடினார்.

அவர் பிறந்த நாட்களிலே, பிரிட்டனிலிருந்து, கவர்னர்களும் மற்ற அதிகாரிகளும் இங்கு வந்தவண்ணம் இருந்தனர். ஆள்வதற்கு அடிமை இந்தியாவை, விட்டு வெளியே அவர்கள் போகும் காட்சியைப் பார்த்துவிட்ட பிறகே, உத்தமர் உயிர் நீத்தார்

இவ்வளவையும், அவர் மந்திரக்கோல் கொண்டோ, யாக குண்டத்தருகே நின்றோ சாதிக்கவில்லை — மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார்; புதிய வாழ்வு தந்தார்; புதிய அந்தஸ்து தந்தார்.

இவ்வளவு தந்தவருக்கு, அந்தத் துரோகி தந்தது, மூன்று குண்டுகள், சாக்ரடீசுக்கு விஷம் தந்ததுபோல.

அவர் சாதித்தவைகள் மகத்தானவை; ஆனால் அவர் சாதிக்க எண்ணியிருந்தவை, வேறுபல; அவை மேலும் மகத்தானவை.

நாட்டிலே உள்ள மற்றக் கொடுமைகள் ஜாதிச் சனியன், வறுமை, அறியாமை ஆகியவற்றை அடியோடு களைந்தெறிந்து விட்டு உலகத்தினர் கண்டு பின்பற்றத்தக்க முறையிலே, உன்னதமான இலட்சியங்களைக் கொண்ட ஓர் சமுதாயத்தைக்

காண விரும்பினர். அதற்காக அரும்பாடுபட்டு வந்தார். அந்த நேரத்தில், ஆத்திரத்தால் அறிவை இழந்தவனால், அவர் கொலை செய்யப்பட்டார்.

அவர் கண்ட, அந்த நாள் இந்தியா, வீரர்களைக் கோழையாக்கிவிடக்கூடியது; விவேகிகளை விசாரத்திலாழ்த்தக் கூடியது. முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் அவர்களின் முதுகெலும்பு முறிந்ததுபோலிருந்து, அடிமைச் சுமையினால் நம்பிக்கை தகர்ந்துபோயிருந்த நேரம்.

முடிதரித்த மன்னர்களெல்லாம் ஆங்கில ஆட்சியின் பிடியிலே, கோட்டை கொத்தளம் கட்டிக் காத்தவர்களெல்லாம் நாட்டை இனி மீட்டிட முடியாது என்றெண்ணி வாட்ட முற்றுக் கிடந்தனர். எப்படியோ ஆட்சி நடக்கட்டும், இதை எதிர்ப்பதோ முடியாத காரியம், இதற்குப் பயபக்தி விசுவாசம் காட்டி ஏதேனும் பலன் பெற்று, காலந்தள்ளுவோம் என்று பலர் எண்ணிவிட்டனர்.

அவர்களிடம் ஆயுதம் இல்லை — ஆட்சியாளர்களோ, ஆயுத பலமுள்ளவர்கள்,

அவர்களிடம் நம்பிக்கை இல்லை, ஆட்சியாளர்களிடமோ, நம்பிக்கை, ஆணவமாகிவிட்ட நிலை.

இந்த நிலையிலே தோன்றினார், விடுதலைப் போர் தொடுக்க. யார் அந்தச் சமயத்திலே நாட்டை நோக்கினாலும், நம்பிக்கை துளியும் பிறக்காது. இவர் நம்பிக்கையுடன் பணியாற்றலானார்.

நாட்டு மக்களிடம் நம்பிக்கை ஊட்டினர்; அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானர்; நானிலத்தின் நன்மதிப்பைப் பரிசாகப் பெற்ருர்.

'முடியுமா?' என்ற சந்தேகத்தை அவர் விரட்டினர். நாடு விடுதலே பெறவேண்டுமா, அல்லவா? என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டார்; ஆம் என்றது அவருடைய தூய்மையான உள்ளம் — உள்ளம் உரைத்ததை ஊராருக்கு அறிவித்தார் ஊரார் சந்தேகமும் பயமும் கொண்டனர். விடுதலே வேண்டும், நாடு மீளவும், கேடு தீரவும், தாம் இனி மனிதராய் வாழவும், கட்டாயமாக விடுதலே வேண்டும்; ஆனல் நம்மால் முடியுமா? என்று கேட்டனர்.

'விடுதலே வேண்டும் என்று மனம் கட்டளையிட்டுவிட்ட பிறகு மறு கேள்வி ஏது? அவர் கேட்டார்.

'அவர்கள் பலசாலிகள்' மக்கள் கூறினர்.

'நாம் பலம் பெறவேண்டும். பெறுவோம்' அவர் உரைத்தார், உறுதியுடன்.

'சிறையிலே தள்ளுவார்களே' பயத்துடன் கூறினர் மக்கள்.

'தள்ளுவர் — ஆனல் இப்போது உள்ள இடமும் சிறை தான், இது பெரிய சிறை' அவர் பதில் சொன்னர், நகைச் சுவையுடன்.

'தடியடி, துப்பாக்கி, தூக்குமேடை, அந்தமான் தீவு என்பன போன்ற எத்தனேயோ ஆபத்துகள் அடுத்தடுத்து

வரும் — உரிமைப் போரிலே உள்ள ஆபத்துக்களை அவர் ஒளிக்காமல் குறைக்காமல் கூறினர்.

இவ்வளவையும் நான் பொருட்படுத்தப் போவதில்லை. மரண பயமின்றி இக்காரியத்திலே ஈடுபடத் தீர்மானித்து விட்டேன். ஆயுத பலத்தை நம்பி அல்ல, மன உறுதியை நம்பி நாம் நமது பிறப்புரிமைக்காகப் போராடுகிறோம். இது தர்மம் என்ற பலத்தை நம்பிப் போரைத் தொடுக்கிறேன் என்றார்; தொடுத்தார். வயலோரத்திலிருந்து வாட்டமுற்ற உழவன் முதற்கொண்டு வசீகர வாழ்விலே இருந்துவந்த சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை வரையிலே, அவர் மூகாமில் வந்து குமிந்தனர்.

வேறு நாடுகளிலே விடுதலைப் போர் தொடுத்தவர்கள். இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ. சொந்தத்திலேயோ, வேறு நாட்டின் துணைகொண்டோ, இராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைக் குவிப்பது, மறைந்திருந்து தாக்குவது, சதி செய்வது என்ற பல முறைகளைக் கையாண்டனர், தாய் நாட்டின் விடுதலைக்காக இவையாவும். எனவே, சரியா தவறு என்ற கேள்விக்கும் இடம் இல்லை என்றனர்.

உலக வரலாற்றிலேயே முதன் முறையாக இந்தத் திட்டம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, புதியதோர் தத்துவத்தைக் கொண்ட திட்டத்தை, ஆயுதமின்றி, இரகசியமின்றி, வெளிப் படையாக, தூய்மையுடன் விடுதலைப் போர் நடத்தலானர்; அதிலே வெற்றியும் கண்டார்.

அந்த வெற்றி வீரனுக்கு வெறியன் தந்த பரிசு மூன்று குண்டுகள் — அடிமைகளின் விடுதலையைப் பெற்றுத்தந்த

ஆபிரகாம் லிங்கன் மீது அங்கோர் வெறியன் குண்டு வீசியது போல.

இவ்வளவு பெரிய துணைக்கண்டத்துக்கு விடுதலையை வாங்கித் தந்தவர் நாட்டு மக்களின் ஏழ்மைக்கோலத்தைக் கண்டார். கருத்திலே அக்காட்சி கலந்தது, அவர் அவர்களில் ஒருவராகவே வாழலானார். எல்லாம் மாயம், உலகமே இந்திரஜாலம் என்று உபதேசிக்கும் குருமார்கள் தங்கப் பாதக் குறடும், வைரம் இழைத்த குண்டலங்களும் அணிந்துகொண்டிருக்கக் கண்ட மக்கள் முன்பு, எவ்வளவு சுகமும் வசதியும், நினைத்தால் பெறுவதற்கு உரிமையும் வாய்ப்பும் பெற்றிருந்தும், ஏழை வாழ்வே நடாத்திய உத்தமர், உலவினார். மக்களின் மனம் என்னென்ன எண்ணியிருக்கும்! குண்டலமணிந்த குருமார்களையும் குறுந்தடி பிடித்து உலவிய உத்தமரையும் ஏக காலத்தில் கண்டபோது, கண்டறியாதன கண்டோம் என்று களித்தனர். காதகனுக்குக் கண்ணிலேயும் கடுவிஷம் — அவன் காணச் சகிக்கவில்லை இந்தக் காட்சியை — கொன்றான் உத்தமரை — அருளொழுகும் கண்ணுடையவர் என்று மக்கள் கூறக்கேட்டும், ஏசுவைச் சிலுவையில் அவறந்த வஞ்சகர் போல.

அவரைக் கொன்றானே கொடியோன், அப்பொழுது அவர் மனதிலே இருந்துவந்த எண்ணங்கள் யாவை என்பதை, எண்ணும்போதுதான், நாம் எவ்வளவு பெரிய நஷ்டத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பது விளங்குகிறது. கல்லும் கட்டையும் காகிதக் குப்பையும் ஏற்றிக்கொண்டு சென்ற கலம் கவிழ்ந்தால் நஷ்டம் என்ன? முத்து, பவளமும் முழுமதி போன்ற துகிலும் பிறவும் கொண்டு செல்லும் கலம் கடலிலே

மூழ்கிவிட்டால், நஷ்டமும் மனக் கஷ்டமும் நெஞ்சை வெந்திடச் செய்யுமல்லவா? அதுபோல காந்தியாரைக் கயவன் கொன்றபோது, அவருடைய மனதிலே அருமையான திட்டங்கள் நாட்டுக்கு நலன்தரும் புதியமுறைகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. அதை எண்ணும்போதுதான் எவ்வளவு பெரிய நஷ்டம் இந்தச் சம்பவம் என்பது விளங்குகிறது.

விடுதலைபெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவுகட்டவில்லை. நாட்டை மீட்க வேண்டும்—நல்லாட்சி அமைக்கவேண்டும் – மக்களை நல்லவர்களாக்க வேண்டும் — வீரம், தீரம், விவேகம் மூன்றையும் விரும்பினார். மக்களை நல்லவர்களாக்க வேண்டும் என்பதே அவருடைய இறுதி இலட்சியம். நல்ல மனிதர்களால்தான் நல்லாட்சி நடத்தமுடியும். நாட்டுக்கு விடுதலையும் கிடைத்து மக்கள் நல்லவர்களாகாமல், கொலைபாதகர்கள், கொள்ளைக்காரர்கள், ஆதிக்க வெறியர்கள், ஆள் விழுங்கிகள், ஆஷாடபூதிகள் ஆகியோரின் ஆதிக்கம் அழிந்துபடாதிருந்தால், விடுதலையால் என்ன பலன்? வேடனிடமிருந்து மீட்டுவந்த புள்ளிமானை வேங்கையின்முன் துள்ளி விளையாட விடுவதா?

இதை எண்ணினால், நாடு விடுதலை பெற்றதும் நல்லாட்சி அமைக்கும் வழிவகை கூறி, அந்தப் பொறுப்பை உடனிருந்தோரிடம் தந்தார்; மக்களை நல்லவர்களாக்கும் நற்பணி புரியலானார்.

நல்ல மனிதர்களெல்லாம் திடீர் திடீரென்று பொல்லாத செயல் புரியக் கிளம்பியது கண்டார்; மனம் மிக நொந்தார்; மனிதனுக்குள் இருக்கும் மிருகம் வெளிப்படக் கண்டு, மிகவும் வேதனைப்பட்டார். இந்தச் சூழ்நிலையை மாற்றியாகவேண்டும். என்று தீர்மானித்து பணி புரியலானார். அந்த அரும்பணியாற்றுவாயிலேதான் அநியாயமாய்க் கொல்லப்பட்டார்.

நாட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்கப் பல கலைவாணரையும் மக்களையும் நல்வழிப் படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாகவேண்டும். எந்த நாட்டிலும் அனைவரும் ஏககாலத்தில் கிடைக்கமாட்டார்கள். ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித் தனித் தலைவர்கள் கொள்ளவேண்டிய குணத்தை அவர் கொண்டிருந்தார். உலகவரலாற்றிலே இதற்கு வேறு ஈடு கிடையாது.

விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு, போர்த்திறனால்; நல்லாட்சி நிறுவியவர்கள் உண்டு - அறிவின் மேம்பாட்டினால்; மக்களை நல்லவர்களாக்கினவர்கள் உண்டு—தூய்மையினால் மூன்று அரும் பணிகளையும் ஒருசேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு உத்தமர் காந்தியார் ஒருவருக்கேதான் உண்டு!

நாடு விடுதலைபெற, அன்னியருடன் போராடவேண்டி இருந்தது. செய்தார், வெற்றிபெற்று நாட்டுக்குச் சிறப்பை வாங்கித் தந்தார்.

நல்லாட்சி நிறுவுவதற்காக திட்டங்களை நிபுணர்களைக் கொண்டு தீட்டவேண்டும்—அந்தக் காரியத்தை நடத்த, அகிலம் அறிந்த பண்டித நேரு இருக்கிறார் என்ற களிப்பும் நம்பிக்கையும் கொண்டார்.

மக்களை நல்லவர்களாக்குவதற்கு அவர்கள் மனதிலே உள்ள மாசுகளைப் போக்கவேண்டும், மக்கள் மனதிலே பல காலமாக மூண்டுபோய்க் கிடக்கும் மதவெறி அதன் கிளைகளான பேத புத்தி, வகுப்புத்துவேஷம், கொடுமை ஆகியவைகளைக் களைந்தாகவேண்டும். மக்கள் மனதிலே குரோதத்தை, சுயநலத்தைத் தூவும் முறையிலே உள்ள போதனைகளை, ஏற்பாடுகளை, எண்ணங்களை அகற்றியாகவேண்டும் என்று அவர் எண்ணினார்.

இந்து மதத்திலே ஏறிப்போய், ஊறிப்போயிருந்த கேடுகளைத் தமது பரிசுத்த வாழ்க்கையாலும் தூய்மையான உபதேசத்தாலும் புதிய விளக்க உரைகளாலும் நீக்கும் காரியத்தில் ஈடுபடலானார். அன்பு நெறி தழைக்கவேண்டும் என்றார். அவர் இந்த மதம், அவன் அந்த மதம் என்று குரோதம் கொள்ளாதீர் என்றார்; இது பெரியது இன்னொன்று தாழ்ந்தது என்று எண்ணாதீர் என்றார்; தீண்டாமை போகவேண்டும் என்றார்; அமளிக்கிடையே நின்று படுகொலைகள் நடைபெற்ற இடத்திற்கெல்லாம் சென்று இதனைக் கூறிவந்தார்.

மிக மிக எளிய வாழ்க்கையில் இருந்துகொண்டு இன்சொல் பேசி, எந்த முறையையும், ஐதீகத்தையும் ஒரே அடியாக ஒழித்துவிடும் புரட்சித் திட்டமும் கூறாமல் மக்களை நல்லவர்களாக்குமளவுக்குப் பழைய முறைகளிலே உள்ள தூசு தட்டி, மாசுபோக்கி, பயனுடைய மனித மேம்பாட்டுக்கு உதவக்கூடிய ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று பாடுபடலானார் — இதற்கு இவரைக் கொலை செய்தான் மாபாவி, எண்ணும்போதே நெஞ்சு பதறுவதுமட்டுமல்ல இவருடைய இன்சொல் முறைக்கே மதவெறி இவரைப் பலிகேட்டது என்றால், நாட்டிலே தலைகீழ் மாற்றம், செங்கோல் ஜபமாலை இரண்டும் செலுத்தும் ஆதிக்கம் ஆகியவற்றை ஒழிக்க வேண்டுமே! இனி, நமது நாட்களில் அப்போதுதான் தன் ஆட்சி நல்லாட்சியாக முடியும். அந்தக் காரியம் செய்யும் போது உத்தமர் உயிரைக் குடித்த மத ஆதிக்க வெறி

உலவுமானால், எத்தனை கோட்சேக்கள் கிளம்புவாரோ என்பதை எண்ணும்போதே நெஞ்சு திடுக்கிடுகிறது.

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால், அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி, ஜாதி, ஆணவம், சுய நலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாகவேண்டும் — என்று பேசி வந்தபோதும் நாட்டை மீட்கவேண்டும் என்று அவர் அன்னியருடன் போரிட்டபோதும் கிளம்பாத பயங்கரச் சக்தியொன்று கிளம்பியது. கோட்சே உருவில், அதுதான் மத ஆதிக்க வெறி! அதனால் கொலையுண்டார்.

தோட்டத்தை மண்மேடாக்கியவனிடமிருந்து மீட்டு, அதைப் புன்னகைப் பூந்தோட்டமாக்குவதற்காக, அழகிய மலர்ச்செடிகளுக்கான விதைகளைத் தூவ அங்கு சென்ற போது, புதருக்குள்ளிருந்து, பாம்பொன்று வந்து கடித்துக் கொல்வதுபோல், நாட்டை மீட்டு, நல்லாட்சி அமைத்து, மக்களை நல்வர்களாக்குவதற்காகக் கருத்தை பரப்பும்போது, கோட்சே கிளம்பினான். இந்தப் பழியைத் துடைத்தாக வேண்டும். பாரெங்கும் பேசுவர். நாட்டை மீட்டுத்தந்த உத்தமனை, உள்நாட்டு மத ஆதிக்க வெறி கொன்றது என்று.

மேட்டினைப் பூந்தோட்டமாக்க விதை கொண்டு வந்த வேலையில் பாம்பொன்றினால் இறந்த தோட்டக்காரனைக் கண்டு புலம்புவதும், பாம்பை அடித்துக் கொல்வதுமட்டு மல்ல, குடும்பத்தாரின் கடமை. இறந்து கிடப்பவரின் கரத்திலே உள்ள விதையை எடுத்துப் பார்த்து விம்மி விம்மி அழுதானபிறகு, இவைகளைத் தூவி இங்கு பூந்தோட்டம் காண விரும்பினார். அவர் மறைந்தார், விதையோ இருக்கிறது, இதோ, இதைத் தூவுவேன், இதோ இருக்கிறது. பூந்தோட்டம் காண்பேன், அந்த உருவில் அவரைக் காண்பேன், அந்த மணத்திலே அவர் பெருமை தெரியக் கண்டு மகிழ்வேன்,

அவர் செய்து வந்த பணியை, நான் மேற்கொள்வேன் என்று கூறி அதை நடைமுறையில் கொள்வது ஆற்றலையாகும். மறைந்த உத்தமர், மத ஆதிக்க வெறியால் கொல்லப்பட்டார். அந்தக் கொடும் பாம்பை, ஒழித்தாக வேண்டும் அவர், அனைவரும் ஒன்று எனும் அன்பு மார்க்கக் கருத்தை தூவிவந்தார். அதை நாம் செய்து முடிப்போம் என்பதே நமது உறுதியாக இருக்கவேண்டும்.

புத்தர் காலத்திலே நடந்தேறியதுபோல புதிய வழியைக் கொள்வோம் என்ற உறுதிகொண்டு உழைப்பதே, நாம் அந்த உத்தமருக்கு எழுப்பக்கூடிய நிலையான ஞாபகச் சின்னம்.

